# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

## சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் XI] 1919ஆம் டிஸம்பர்மீ [இலக்கம் 6


## பத்திராதிபரின் குறிப்புகள்.

---

மெட்றஸ் சென்ட்ரல் ஹௌஸிங் (வீடுகட்டும்) அஸோஸியேஷன் (சங்கம்)

சென்னையில் சென்டிரல் ஹௌஸிங் அஸோஸியேஷன் என்று சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்பதை அறிய மிகவும் சந்தோஷப்படுகிறோம். சென்னை நகரின் தொழிலாளர்களுடையவும் இதர ஏழைகளினுடையவும் வீட்டின் கஷ்டங்களை நீக்கவும் அவர்களுக்குச் சுகாதார நிலையில் நல்ல வீடுகள் கட்டிக் கொடுப்பதுமே இச்சங்கத்தின் நோக்கம். சங்கத்திற்குத் தலைவராக ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி ஐயரவர்கள் இருக்கிறார். சென்னை நகரில் சுகாதார வீடுகள் கட்டிக்கொடுக்கும் விஷயமாக அவர் எழுதிய அநேக அரிய வியாசங்களை இச்சஞ்சிகையை வாசிப்பவர்கள் படித்திருக்கலாம். சமீபத்தில் நடைபெற்ற சென்னைமாகாண கோவாபரேடிவ் கான்பரன்ஸிற்கும் அவர் அக்கிராசனம் வகித்தார். இவ்வளவு ஊ கமும் சிரத்தையும் கொண்ட ஒருவரை அக்கிராசனராக அச்சங்கம் அடைந்த பாக்கியத்திற்கு அச்சங்கத்தைப் பெரிதும் மெச்சுகிறோம். அச்சங்கமானது பிரசார வேலை செய்யும், வீடுகளைக்கட்டி ஏழைகளுக்கு வாடகைக்குக் கொடுக்கும். அல்லது விலைக்கு விற்கும். கிளைச் சங்கங்களை ஸ்தாபனஞ் செய்யும். கிளைச் சங்கங்களுக்கு வேண்டிய பணத்திற்கு உதவி செய்யும். இச்சங்கம் ஒரு பிரைமெரி சங்கம் போலவும், செண்டிரல் சங்கம் போலவும், யூனியன் போலவும் வேலைகளைச் செய்துவரும். சிக்கனத்தையும் சுய உதவியையும் கைக்கொண்டு தன்னுடைய சுயபலத்தால் சொந்தமானவீடு [illegible]க்கொள்ள அல்லது க[illegible]க்கொள்ள முயல்கிறவர்களுக்கு. இச் சங்கம் [illegible]வி செய் [illegible] டு வாங்கிக் கொள்ள அல்லது கட்டிக் [illegible] மு [illegible] ஏழைகளுக்கும் இச்சங்கம் [illegible]

உதவிசெய்யும். இங்கிலாந்து தேசத்தில் கவர்ன்மெண்டாரிட மிருந்து ஏராளமான உதவியும் ஆதரணையும் பெற்று வேலை செய்து வரும் பட யூடிலிடி (Public Utility Societies) சங்கங்கள் போல இச்சங்கம் வேலை செய்துவரும். ஏழைகளுக்கு உதவியும் உபகாரமும் செய்ய எண்ணங் கொண்டுள்ள கனவான்களும், தன்னுடைய சுய உழைப்பினால் சொந்தவீடுகளடைய எண்ணங் கொண்டுள்ள ஏழைகளும், சொந்தத்தில் வீடுவாங்க சக்தியில்லாது எப்பொழுதும் வாடகைக்கே குடியிருக்க விரும்பும் ஏழைகளும் இச்சங்கத்தில் மெம்பர்களாகலாம். இங்கிலாந்து பப்ளிக் யூடிலிடி சங்கங்கள் கொடுக்கும் டிவிடெண்டிற்கு (பங்குத்தொகையின்மேல் கொடுக்கும் இலாபப்பிரிவினைத் தொகைக்கு) ஒரு நிர்ணயம் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. அதாவது 100-க்கு வருஷம் 1-க்கு ஆறு வீதம் நிர்ணயஞ் செய்யப்பட்டுள்ளது. சென்னையில் ஸ்தாபனமாயுள்ள ஹௌஸிங் அஸோஸியேஷனும் இத்தகைய விதியொன்றை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. டிபாசிட்டுகள் பேரிலும், சங்கம் வாங்கும் இதரக்கடன்கள் பேரிலும் கொடுக்கப்படும் வட்டி 100-க்கு வருஷம் 1-க்கு ஆறு வீதம் என்பதாக நிச்சயஞ் செய்யப்பட்டிருக்கின்றது. இங்கிலாந்தில் இத்தகைய சங்கங்களுக்குக் கவர்ன்மெண்டார் பண உதவி செய்வதுபோல் சென்னையில் ஏற்படுத்தப்பட்டுள்ள இத்தகைய சங்கத்திற்கும் கவர்ன்மெண்டார் பணஉதவி செய்யவேண்டு மென்று நாம் பன்முறையும் எடுத்துக் காட்டியுள்ளோம். இங்கிலாந்திலுள்ள பப்ளிக் யூடிலிடி சங்கங்களுக்கு இரண்டுவகை உதவிகள் கவர்ன்மெண்டிலிருந்து கிடைக்கின்றன. கவர்ன்மெண்டார் கடன்களும் கொடுக்கிறார்கள். தவிர ஸப்ஸிடீஸ்களும் கொடுக்கிறார்கள் ஸ்ரீமான் சேஷகிரி ஐயரவர்களுடையவும் இன்னும் அவர்கள் போன்றவர் களுடையவும் போன்ற பொறுப்பானவர்களுடைய ஆதரணையில் ஸ்தாபனஞ் செய்யப்பட்டிருக்கும் இச்சங்கத்திற்கு கவர்ன்மெண்டார் நீண்டகாலக் கடன்கள் நான்கு வட்டிக்குக் கொடுக்கவேண்டும். நான்கு வட்டிக்குக் கொடுக்கவேண்டுமென்பதை வற்புறுத்திச் சொன்னதின் நோக்கம் இச்சங்கம் சிப்பந்திகளை வைத்துக் காரியங்கள் நடத்தவேண்டியிருக்கும். இன்னும் சங்கத்திற்கு அநேக செலவுகளும் ஏற்படும். வெளியிலிருந்து டிபாசிட்டுகள் ஆறு வட்டிக்குக் குறைந்து கிடைக்காது. கவர்ன்மெண்டார் நான்கு வட்டிக்குக் கொடுத்து உதவி செய்தாலல்லது தாழ்ந்த தாரணை வாடகைக்கு வீடுகளை வாடகைக்குக் கொடுக்க முடியாது. கோவாபரேடிவ் சொஸைடிகளின் ஆக்டின் கீழ் சங்கம் ரிஜிஸ்தர் செய்யப்படும். ரிஜிஸ்தாரரவர்களும், கவர்ன்மெண்டாரும் காட்டும் ஊக்கத்தினாலும் அனு... வும் சங்கம் அதிகப் பிரயோசனமான ஏராள நன்மை... ன்று கருதுகிறோம்.



ச...த்தில் நடந்த மைசூர் கோவாபரேடிவ் கான்பரன்ஸ் முன்பாக இர... முக்கிய விஷயங்கள் ஆலோசனைக்கு வந்தன. அக்கான்பரன்ஸிற்கு இந்திய ஊழியச்சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் ஜீ. கே. தேவதார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். யோசனைக்கு வந்த விஷயங்களாவன:—(1) ரிஜிஸ்தாராருடைய ஜட்ஜ்மெண்டு (அவார்டு) ஏற்படுவதன் முன்பாக சங்கத்தின் கடன்கார மெம்பரினுடையச் சொத்துக்களைக் கைப்பற்றவேண்டுமென்பதும் (2) ரிஜிஸ்தாராருடைய அவார்டை (டிக்ரியை) ரிவின்யூ அதிகாரிகள் மூலமாய் நிறைவேற்றவேண்டுமென்பதும்.

தீர்ப்பு ஏற்படுவதற்குமுன் சொத்துக்களைக் கைப்பற்றுதலும், டிக்ரிகளை நிறைவேற்றுதலும்.

முதலாவது விஷயத்தைக்குறித்து எத்தகைய அபிப்பிராய பேதமும் இருந்ததாகத் தெரியவில்லை. தற்காலம் ஸிவில் கோர்ட்டுகளுக்கு இத்தகைய அதிகாரம் இருக்கின்றது. இவ்வதிகாரத்தை ரிஜிஸ்தாராருக்குக் கொடுப்பதால் எவ்விதத்தீமையும் ஏற்படாது. இத்தகைய அதிகாரம் கொடுக்கப்பட்டால் ரிஜிஸ்தரார்முன் தாவா தாக்கல் செய்தபின் சங்கத்தை ஏமாற்றவேண்டுமென்ற நோக்கத்துடன் சொத்துக்களை விற்பனை செய்ய முயல்வது தடுக்கப்படும்.

இரண்டாவது விஷயம் எளிதானதன்று. இதுகாரணம்பற்றி இவ்விஷயத்தில் அபிப்பிராய பேதங்கள் மிகவும் பலமாகவே இருந்தன. தற்காலம் ரிஜிஸ்தாராருடைய டிக்ரிகளெல்லாம் ஸிவில் கோர்ட்டு மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. இப்படிச் செய்யப்படுவதில் அதிகக் காலதாமதம் ஆவதுமன்றி அநேக கஷ்டங்களும் ஏற்படுகின்றன. நோட்டீஸ்கள் ஸர்வு செய்யப்படுவதற்கே மெம்பர்கள் மறைந்துகொள்ளுகிறார்கள். டிக்ரி நிறைவேற்றப்படுவதற்கு அநேகத்தடைகளைக்கொண்டுவருகிறார்கள்சொத்துக்களுக்கு வார்ஸுதார்கள் வேறே இருப்பதாக பொய் வார்ஸுதார்களைக் கொண்டுவருகிறார்கள். இவ்விதமாக டிக்ரி சீக்கிரம் நிறைவேறாவண்ணம் கோர்ட்டு நடவடிக்கைகளை தள்ளிவைத்துக்கொண்டே போகிறார்கள். இது காரணங்கள்பற்றி ரிஜிஸ்தாராருடைய டிக்ரிகள் நிறைவேற்றப்படுவதற்கு ரிவினியூ அதிகாரிகளுக்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் நிலவாய்தாவை வசூல் செய்வதுபோலவே ரிஜிஸ்தாராருடைய டிக்ரித் தொகைகளும் நிறைவேற்றப்பட யேண்டுமென்று கூறப்பட்டது. ஹைதராபாத்து ரிஜிஸ்தரார் ஜனாப் அப்துல்மஜீத்கான் சாஹெப் பகதூரும், மைசூர் ரிஜிஸ்தரார் ஸ்ரீமான் ரெங்கராவ் அவர்களும் இவ்வபிப்பிராயத்தை ஆமோதித்துப் பேசினார்கள். சிலர் இவ்விஷயத்தை எதிர்த்தும் பேசினார்கள். இவர்கள் பேசியதற்கு தகுந்த காரணங்களில்லாமலில்லையென்பது நம்முடைய அபிப்பிராயம். நிலத்திலிருந்து வசூல் செய்யப்படக்கூடியவைகளில் நிலத்தீர்வை முன்னதாக வசூல் செய்யப்

படவேண்டும்மென்பது நியாயமாகும். ஆனால் இதர கடன்கள் விஷயமாகவோ, இத்தகைய சௌகர்யம் காட்டவேண்டுமென்பது அவஸ்யமில்லை. ஒரு கடனுக்காக ஒருவனுடைய நிலத்தை விற்பதானால் அந்நிலத்தின் பேரில் இருக்கக்கூடிய இதரவார்சுகளையும் கடன்களையும் கவனிப்பது நியாயமேயாகும். ஆனாலும் தற்காலம் ஏற்படுகிற கால தாமதங்களைத் தடுக்கவேண்டியது அவசியமே. இதற்காக நாம் கூறும் யோசனை யென்னவென்றால் ரிஜிஸ்தராருடைய டிக்ரியை ரிவினியூ அதிகாரிகள் மூல்யமாக நிறைவேற்றிவைக்கவும் பின்னால் ஏற்படும் பாத்தியங்களும் விவகாரங்களும் சிவில் கோர்ட்டுகளில் பின்னர் தீர்த்துக்கொள்ளும்படியும் சட்டம் மாற்றப்படவேண்டு மென்று நாம் கூறுகிறோம.

***

**கூட்டுறவும்பிரதிநிதித்துவமும்.**

கான்பரன்ஸில் கவனிக்கப்பட்ட மற்றொரு மூக்கிய விஷயம் என்னவெனில் சோவாபரேடிவ் சங்கங்களின் பிரதிநிதிகள், லோகல் போர்டுகளிலும், மைசூர் மாகாண பிரதிநிதிச் சபையிலும், சட்டசபையிலும் நியமிக்கப்படவேண்டு மென்பதே. ஹைதராபாத்து கோவாபரேடிவ் ரிஜிஸ்தரார் உள்பட கூட்டுறவுப் பிரதிநிதிகள் தனி எலெக்ட்ரேட்டாக (பிரதிநிதிகளை தெரிந்தெடுப்பதற்குத் தனிவகுப்பாக) இருக்கவேண்டுமென்று அபிப்பிராயங்கொண்டார். சென்னை மாகாண ரிஜிஸ்தரார் மிஸ்டர் ஹெமிங்வேயும், இன்னும் அநேகரும், இப்படி தனி எலக்டரேட்டாக்கினால் மெம்பர்களுக்குள் ஒற்றுமை குறையுமென்றும், வேற்றுமைக் கிடமேற்படுமென்றும் சொன்னார்கள். நம்மாகாண ரிஜிஸ்தரார் கூறுவதை நாம் முற்றும் அங்கீகாரஞ் செய்கிறோம். இப்படி தனி எலக்டரேட் ஏற்படுமானால் மெம்பர்களுக்குள் எத்தகைய வேற்றுமையும், மனஸ்தாபமும், விரோதமும் ஏற்படுமென்பது நாம் அறிவோம். ஜனகார சீர் திருத்தம், பொருளாதார சீர்திருத்தம், முதலிய திருத்தங்கள் உள்ள கூட்டுறவு இயக்கம் போன்ற இயக்கங்களில் இராஜீய விஷயத்தைப் புகச்செய்வது சிறிதும் நியாயமாகாது. கூட்டுறவுச் சங்கம், எல்லாவகுப்பு இராஜீய விவகாரிகளும் ஒன்று சேர்ந்து விஷயங்களை அறிந்துகொள்ளக் கூடியவும் சிநேகத்தை வளர்ச்சி செய்யக்கூடியவும் இடமாக இருக்கவேண்டும்.

அயர்லாந்து தேசத்தில் இராஜீய விஷயங்களில் வித்தியாசங்கள் தலை தூக்கிநிற்கின்றன. அங்கு கூட்டுறவுச் சங்கங்களில் இராஜீய விஷயத்தை சிறிதளவும் கலப்பது கிடையாது. கூட்டுறவினர்களும் பொதுஜனங்களின் ஒரு பாகம். எலக்ஷனில் இவர்களும் தலையிடுவது நியாயமேயாகும். ஆனால் கூட்டுறவினர்கள் என்னும் முறையில் தலையிடுவது நியாயமாகாது. இராஜீய விஷயத்தை பொதுவாக யோசித்துப்



பார்க்குமிடத்தும் பிரத்தியேக சமூகத்தாருக்கென்றேனும், அல்லது பிரத்தியேக வகுப்பினற் கென்றேனும் தனி எலக்டரேட்டுகள் நியமிப்பது சரியல்ல. ஒற்றுமையாயும், நேசமாயும் இருக்கவேண்டிய இவ்வியக்கத்தில், தீமையை விளைவித்து வேற்றுமையை உண்டாக்கக்கூடிய இத்தகைய விஷயத்தைக்கொண்டு வருதல் நியாயமாகாது.

***

**பொதுஜன கூட்டுறவும் ஜனசார சீர்திருத்தமும்.**

ஆசாரச் சீர்திருத்தக் கௌன்ஸில் என்பதாக ஒரு இயக்கம் சென்னையில் சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அநேக வருஷங்களாக சென்னை ஜனசார சீர்திருத்தச் சபையின் அக்கிராசனராக இருந்த மிஸஸ் வைட்ஹெட் அம்மையார் இக்கௌன்ஸிலுக்குத் தலைமை வகித்திருக்கிறார். சென்னையில் வேலைசெய்துவரும் அநேக ஆசாரச் சீர்திருத்தச் சபைகளுக்கும் இக்கௌன்ஸில் ஒரு பெடரேஷன்போல் வேலைசெய்யும். வெளியிலுள்ள ஆசாரச் சீர்திருத்தச் சங்கங்களும் இச்சபைக்கு அணைக்கப்படலாம். ஜனசார சீர்திருத்தத்தில் உழைக்க விரும்புகிறவர்களுக்கு போதனை வகுப்பு (டிரெய்னிங்கிளாஸ்) ஒன்று இக்கௌன்ஸில் தயார் செய்திருக்கின்றது. கற்பிக்கப்படும் விஷயங்களில் கூட்டுறவு விஷயமும் முக்கியமாகப் போதிக்கப்படுமென்பதைக் கேட்க மிகவும் சந்தோஷப்படுகிறோம். நாணயச் சங்கங்களும், நாணயச் சங்கங்களல்லாத இதரச் சங்கங்களும், ஆசாரச் சீர்திருத்த இயக்கத்தில் உழைப்பவர்களால் ஏற்படுத்தப்பட்டு வேலைசெய்துவருகின்றன. கூட்டுறவு விஷயமாக போதனை பாடங்களும் பிரத்தியட்சமாக வேலைசெய்யும் உதாரணங்களும் ஜனசார சீர்திருத்தத்தில் உழைப்பவர்களுக்கு அதிகமாகப் பிரயோசனப்படும். மிஸஸ் வைட் ஹெட் அம்மையாரையும் இன்னும் சிலரையும் ஹானரரி அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தராக நியமிக்கப்போவதாகக் கேள்விப்படுகிறோம். ஜனசார சீர்திருத்தச் சபையினரால் ஏற்படுத்தப்படும் கூட்டுறவுச் சங்கங்கள் இன்னும் அதிகத் திறமாக வேலைசெய்வதற்கு இவ்வேற்பாடு இடங்கொடுக்கக்கூடும். ஜனசார சீர்திருத்தக்காரர்களை பழக்கும் விஷயம் டிசம்பர் மாதம் 9ந்தேதி வை. எம். ஸி. ஏ. கட்டடத்தில் ஹிஸ் எக்ஸலன்ஸி கவர்னரவர்கள் அக்கிராசனத்தில் நடந்த மீடிங்கில் ஆரம்பஞ் செய்யப்பட்டது. அந்த மீடிங்கில் ஹானரபில் மிஸ்டர் எஸ். ஸ்ரீனிவாஸ ஐயங்காரவர்களும், ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி ஐயரவர்களும், மெட்ருஸ் லார்டு பிஷப் அவர்களும் விஜயஞ் செய்திருந்து பேசினார்கள். இவ்விஷயத்தை மெச்சிப்பேசி தன்னால் சீக்கிரம் சாங்கிஷன் செய்யப்படப்போகிற ஸ்கீமில் கூட்டுறவுச் சங்கங்களின் தொகை அதிகப்படுத்தவும் கூட்டுறவு இயகத்தின் பிரயோசனத்தை விசாலப்படுத்தவும் சௌகரியங்கள் ஏற்படுமென்பதாகச் சொன்னார். ஏற்படுத்தப்

போகிற ஸ்கீமில் வரிசெலுத்துவோர்களுடையபணம் முன்னிலும் அதிகமாக செலவாகுமென்றும் எச். இ. கவர்னரவர்கள் சொன்னார். அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்கள் அதிகப்படுத்தப் போவதாகச் சொல்லப்படும் விஷயத்தை அவர் எண்ணிச் சொன்னதாக நாம் கருதவில்லை· ஏழைகளுக்காகவென்று ஏற்படுத்த நினைத்திருக்கும் கட்டடச் சங்கங்களுக்குக் கோரப்படும் கவர்ன்மெண்டு உதவியையே அவர் எண்ணிச் சொன்னதாக நாம் கருதுகிறோம்.

***

கிருஷ்ணா ஜில்லா போர்டு பிரசிடெண்டவர்களின் சிபார்ஸின்மேல் லோகல் பண்டு இன்ஜினீரிங் இலாக்கா கண்டிராக்டர்கள் தங்களுடைய ஜாமீன் தொகையை சென்டிரல் பாங்குகளில் போட்டுவைக்கலா மென்பதாக மாகாண கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். தற்காலம் அவர்களுடைய டிபாஸிட்டுகளெல்லாம் கவர்ன்மெண்டு கஜானாவில் யாதொரு பிரயோஜனமுமில்லாமல் இரண்டு மூன்று வருஷங்களுக்குக் கிடக்கின்றன. டோல்கேட்டு கண்டிராக்டர்களும் தங்களுடைய டிபாசிட்டுகளை கோவாபரேடிவ் சங்கங்களில் போட்டுவைக்கலா மென்பதாக சமீபத்தில்தான் கவர்ன்மெண்டார் உத்தரவு செய்தார்கள். கோவாபரேடிவ் சங்கங்களுக்கும் கோவாபரேடிவ் சென்டிரல் பாங்குகளுக்கும் இவ்வுத்தரவு அதிகப் பிரயோஜனமுள்ளதாக இருக்குமென்பதன்றி அச்சங்கங்களால் இவ்வுத்தரவுகள் மிகவும் மேன்மையாகப் பாராட்டப்படும்.

***

1919௵ ஜூன்மாதம் 30௳ முடிய திருச்சிராப்பள்ளி ஜில்லா அர்பன் பாங்கில் 45 அங்கத்தினர்கள் இருந்தார்கள். அவர்கள் கட்டியிருந்த பங்குத்தொகையின் மொத்தம் ரூ. 50,000. பிரஸ்தாப வருஷத்திற்கு முந்தின வருஷக்கடைசியில் சங்கத்தில் மெம்பர்கள் டிபாசிட்டு 2·80 லட்சமும், மெம்பர்களல்லாதவர்கள் டிபாசிட்டு 7·3 லட்சமும். பிரஸ்தாப வருஷக் கடைசியில் மெம்பர்கள் டிபாசிட்டு 2·94 லட்சமும் மெம்பர்களல்லாதவர்கள் டிபாசிட்டு 8·31 லட்சமும் இருந்தது. சங்கங்கள் மேற்படி பாங்கில் இதுவரையில் கட்டியிருக்கும் க்ஷேமநிதித் தொகை ரூ. 0·81-லட்சம். மெம்பர்களிட மிருந்தும், இதர சென்ட்ரல் சங்கங்களிடமிருந்தும் வசூலாக வேண்டிய தொகை முன்வருஷத்தைவிட பிரஸ்தாப வருஷத்தில் திருப்திகாமாக வசூலாகி இருக்கிறதென்றாலும், கிராமச்சங்கங்களிடமிருந்து வசூலாக வேண்டிய பாக்கித் தொகை முன்வருஷத்தை விடபிரஸ்தாப வருஷத்தில் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் வரைக்கும் அதிகமாக பாக்கியாய் விட்டது. கிராமச் சங்கங்களில் அதிகமாக பாக்கி எற்பட்டதற்குக் காரணம் ஆறுசங்கங்களால் பாக்கித் தொகை ஏராளமாக ஏற்பட்டுவிட்டது:—



பிரஸ்தாப வருஷத்தில் சங்கத்திற்கு ரூ. 24,406 இலாபமாகக் கிடைத்தது. மெம்பர்களின் பங்குத் தொகையின் மீது 100-க்கு 9-வீதம் [illegible]டு கொடுக்கப்பட்டது. இலாபத்தில் எட்டி லொருபங்கு ரூ. 3,050 காரியதரிசிக்கு சன்மானமாகக் கொடுக்கப்பட்டது. வருஷக் கடைசியில் ரூ. 61,797 சங்கத்தின் க்ஷேம நிதித் தொகையின் மொத்தம். சூபர் விஷன் பண்டுக்காக சங்கம் ரூ. 2,682 பிரஸ்தாப வருஷத்தில் கொடுத்திருக்கின்றது. இம்மாகாணத்திலுள்ள திறமான பெரிய பாங்குகளில் இதுவும் ஒன்று. சங்கம் இவ்வளவு திறமையாகவும் நன்றாகவும் வேலை செய்து வருவதற்கு ராவ் பகதூர் Y. நாராயணராவ் அவர்கள் எடுத்துக் கொள்ளும் சிரத்தையும் ஊக்கமே காரணமாகும்.

***

மதுரை அர்பன் கோவாபரேடிவ் சொஸைடியில் சென்ற வருஷக் கடைசியில் 1,046 மெம்பர்களிருந்தார்கள் அவர்கள். கட்டியிருக்கும் பங்குத் தொகை பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 14,699-லிருந்து 19,139-க்கு உயர்ந்தது. சங்கத்தில் டிபாசிட்டுத் தொகை ரூ. 133,733-லிருந்து ரூ. 1,93,959-க்கு உயர்ந்தது. ஸ்டோர்ஸ் பிரான்சு பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 82,526-க்கு சாமான்கள்வாங்கி வியாபாரஞ் செய்தது. பிரஸ்தாப வருஷத்திற்கு முந்தின வருஷத்தில் ஸ்டோர்ஸ் பிரான்சில் ரூபாய் 57,124 சாமான்கள் விற்பனை செய்யப்பட்டன. பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 77,402-க்கு சாமான்கள் விற்கப்பட்டன. 1919-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ம் தேதியன்றைக்கு கையிருப்பு சரக்கின் மொத்தவிலை ரூ. 16,656 சங்கத்திற்கு பிரஸ்தாப வருஷத்தில் நிகர இலாபம் ரூ. 3,637. இத்தொகையில் ரூ. 2,045 சங்கத்தின் ஜெனரல் பிரான்சி லிருந்தும், ரூ. 1,591-ஸ்டோர்ஸ் பிரான்சிலிருந்தும் கிடைத்தது. சிப்பந்திகளுக்கு போனஸ் கொடுக்கவும், சாமான்கள் வாங்கப்பட்ட தொகையின்மீது

ரூபாய்க்கு 2¼ பைசா ரிபேட்டு கொடுக்கவும் சங்கம் தீர்மானஞ் செய்திருக்கின்றது.

***

நீடாமங்கலத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தஞ்சாவூர் ஜில்லா எருச் சங்கத்தின் மூன்றாவது வருஷத்திய ரிப்போர்ட்டு மிகவும் சிறப்பாகவும், பலவிஷயங்களை போதிக்கக்கூடிய தாகவும் இருக்கின்றது. ரூ. 451-க்கு தயார் செய்யப்பட்ட எரு ரூ. 527-க்கு விற்கப்பட்டது. வெளியிலுள்ள விலையைவிட மிகவும் குறைந்தவிலைக்கே மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்டது. மெம்பர்களுக்கு ரூபாய் ஒன்றுக்கு மூன்று பைசாமுதல் ஆறு பைசா வரையில் போனஸ் கொடுக்கப்படு மென்று தெரிகிறது. விவசாயிகளுக்கு வேண்டிய இன்னுமஇதர சாமான்களிலும் சங்கம் வியாபாரஞ் செய்தது. மீன் எரு புண்ணாக்கு, விதைநெல், பருத்திக்கொட்டை முதலியவை சுமார் 5,057 ரூபாய் பொறுமான சாமான்கள் வாங்கி விற்பனை செய்யப்பட்டன. இச்சாமான்களில் சில மார்க்கெட்டுகளில் கிடைக்காமல் ஜனங்கள் கஷ்டப்பட்டபோதிலும் மெம்பர்களுக்கு மட்டும் இச்சாமான்களை சங்கம் சப்ளைசெய்து வந்தது. கடைவிலையை விட குறைந்த விலைக்கு மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்டது. சங்கத்திற்கு பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 281. இலாபம் கிடைத்தது. இவ்வளவு திருப்திகரமாகவும் பிரயோசனமாகவும் சங்கம் வேலைசெய்து வருவதற்கு அச்சங்கத்தின் காரியதரிசியாகிய ராவ் சாஹேப் வ. சேதுராமையர் அவர்களுடைய ஊக்கமும சிரத்தையுந்தான் காரணம்.

———



# காலஞ்சென்ற ஸர். வி. ஸி. தேசிகாசாரியார்.

[சென்னை கோவாபரேடிவ் சொஸைடிகளின் ரிஜிஸ்ட்ராராகவிருந்த திவான் பகதூர் ஆர். இராமச்சந்திரராவ் அவர்கள் எழுதியது].

காலஞ்சென்ற எனது நேசரான ஸர். வி. ஸி. தேசிகாசாரியாரைப் பற்றி ஒரு சிறிய குறிப்பு புல்லடீன் பத்திரிகைக்கு நான் வரைய வேண்டுமென்று பத்திராதிபர் என்னைக்கேட்டிருக்கிறார். ஸ்ரீமான் தேசிகாசாரியார் ஸெனேட்டிலும், கார்பொரேஷனிலும், சட்ட சபையிலும், கியாதியடைந்தவர். தொழிலில் அவர் வக்கீலாகவும், ஜட்ஜாகவு மிருந்தார். அவரைப்பற்றி இப்பத்திரிகையில் பேசவேண்டியது அவருடைய கூட்டுறவு சம்பந்தமே. அவர் மதராஸ் ஸெண்டிரல் அர்பன் பாங்கின் விஷயமாய் உழைத்த சந்தர்ப்பத்தில்தான் எனக்கு அவருடன் அந்நியோந்நிய சம்பந்தம் ஏற்பட்டது. இவ்விராஜதானியில் கூட்டுறவானது, எவ்வளவு விசேஷமாய் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைப் புகழ்ந்து வரையப் பிரியப்படுகிறேன்.

கீழ்க்காட்டப்பட்டிருக்கும் இலக்கங்கள் தேசிகாசாரியாருடைய பாங்கி என்று ஜனங்களுள் வழங்கித் தெரிந்துவருகிற சென்ட்ரல் பாங்கின் முன்னேற்றத்தைக் காட்டுகிறது. ஸர். வி. ஸி. தேசிகாசாரியார், பாங்கியை ஆரம்பித்து தன்னுடைய கடைசிகாலம் வரையில் அதன் நிர்வாகத்தில் தீவிர சிரத்தை காட்டிவந்தார்.

| | | டிபாஸிட்டுத்தொகை. | நிகர இலாபம். |
|---|---|---|---|
| | | ரூ | ரூ |
| 1906-ம் வருஷம் ஏப்பிரல் முதல் 1907 ஜூன் 30வ வரையில் | | 80,800 | 826 |
| 1908 | ஷை | 161540 | 2219 |
| 1909 | ஷை | 403163 | 6255 |
| 1910 | ஷை | 618829 | 14070 |
| 1911 | ஷை | 837975 | 28787 |
| 1912 | ஷை | 17,20,000 | 42,537 |
| 1913 | ஷை | 2024394 | 52090 |
| 1914 | ஷை | 2215076 | 53418 |
| 1915 | ஷை | 2329530 | 56866 |
| 1916 | ஷை | 2502588 | 21770 |
| 1917 | ஷை | 2751280 | 46007 |
| 1918 | ஷை | 2616268 | 39387 |

டிபாஸிட்டுகள் நிலைவரமாய் முன்னேற்றமடைவதனால் அந்த பாங்கில் ஜனங்களுக்கிருக்கும் நம்பிக்கை தெரிகிறது. நிகர இலாபத்தின் விருத்தியினால் பாங்கி செட்டாய் நிர்வகிக்கப்படுவது தெரிகிறது. 1916,

17, 18. வருஷங்களில் இலாபம் குறைவானதற்குக் காரணம் இலாபக்கணக்கு புதுமாதிரியில் எழுதப்பட்டதாலும் கவர்ன்மெண்டு செகூரிடிக் கடிதத்தின் காலவிலைகள் குறைந்து ஏராளமான தொகை தள்ளுபடியாய் எழுத ஏற்பட்டபடியாலுமே என்று விளங்குகிறது. பாங்கி பெற்றஜயம் முழுவதற்கும் ஸர். வி. ஸி. தேசிகாசாரியாரே காரணம். சமீப வருஷங்களில் பாங்கின் அமைப்பால மிக்க மாறுதல்கள் ஏற்படவிருந்ததைத்தவிர்க்க அவர் மிகவும் சிரமப்பட்டார் என்று தெரிகிறது. அதிக சோதனையான ஆரம்ப காலங்களில் பாங்கின் சார்பாக மிகவும் ஊக்கமாய் நின்றார். ஆகவே மிகத்திறமையாய் வேலை செய்து அனுபவச் சோதனைக்கு ஆளாகியிருந்த இவர் இந்தபாங்கில் மாறுதல்கள் ஏற்படா வண்ணம் அவர் தடுத்தது சகஜந்தான். ஏற்கனவே செழிப்புமுகமாயிருந்து வரும் பாங்கின் இத்தகைய கஷ்டங்கள், அதன் ஆரம்பகாலங்கள் அனுபவிக்க வேண்டியிருந்த கஷ்டங்களை கவனித்தால் ஒன்றுமில்லை யென்றேசொல்லலாம். ஆர்பத் நட்டின் அழிவு, ஜனங்களைப்பயமுறுத்திவிட்டபடியால் பாங்கில் அவர்களுக்கு நம்பிக்கை வரும்படி செய்தல் எளிதான வேலையாயில்லை. தேசிகாசாரியார் படாடோப மில்லாமலும் சுறுசுறுப்பாகவும் உழைத்தார். எவ்வளவோ தடங்கல்கள் வந்தன. அவர் ஜனங்களைக் கொஞ்சியிரந்தார். அவருடைய தொந்தரவுகளைத் தவிர்ப்பதற்காக பணத்தை இஷ்டமில்லாமலாயினும் பாங்கில் போட்டார்கள். அப்படிப் போட்டபணம் நஷ்டமாகாமலிருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். இவ்வாறு மெதுவாய், சந்தடியில்லாமல் ஒரு பெரிய காரியம் அமைந்தது. இப்பொழுது தேசிகாசாரியாரின் பாங்கு நகரத்தின் தலைமையான பாங்குகளி லொன்றாய் இருக்கிறது.

இம்மேம் பாட்டிற்குக் காரணமென்ன? முதலாவது கோவாபரேஷனின் பொறுப்பு வரையில்லாத ஆஸ்தி ஜாமீனே நஷ்டம்வர இடமில்லாமல் தடுத்தது என்பது நிச்சயம். ஆனால் சிலரேதான் இதைத்தங்களுக்குள் உணர்ந்து கொண்டார்கள். ஆகவே ஆரம்ப ஜயம் ஸர். வி. ஸி தேசிகசாரியின் சுறுசுறுப்பும் வியாபாரத் தோதான மாதிரிக்குமே உரித்தானது. செகரிடெரியாக இருந்து காஷ் புஸ்தகத்தைத் தன்கையினாலேயே எழுதினார். ஒவ்வொருகடிதத்திற்கும் உடனுக்குடனே ஜவாபு கொடுத்தார். காரியமான வேலைகளில் அவர் நடந்து வந்த ஒழுங்கு, தன்னுடைய மதத்தின் ஓர் உண்மைச் சம்பிரதாயத்தைக் கவனிப்பதாகவேயிருந்தது. ஒருகாரியம் செய்வதாக வாக்களித்தால் அதை அவசியம் செய்தேதீருவார். கடன்காரன் ஒருநாள் தாமதம்செய்தாலும் அபராதவட்டி அவசியம் விதிக்கப்படும். அவருடைய ஏற்பாடான ஒழுங்கு, பாங்கிற்கு ஒரு முட்டுக் கொடுத்ததுபோலிருந்தது என்று ஜனங்கள் உணரலானார்கள். பாங்கும் செழித்தது.



இந்த பாங்குதான் சென்னை இராஜதானியில் கோவாபரேஷன் இணையில்லாத விருத்தியாகும்படி செய்தது. ஆரம்பத்திலிருந்தே அநேகமாய் சென்னையானது கவர்ன்மெண்டு உதவியைக் கோரவில்லை. பாங்கு முன்னேற்றமடைய சங்கங்களை ரிஜிஸ்டர்செய்ய என்றால் முடிந்தது. கூட்டுறவு நாணயத்தின் சௌகரியமானது முக்கியமாய் பாங்கு சௌகரியமில்லாத எட்டாக்கையிலுள்ள கிராமங்களில் நன்கு தெரிந்திருக்கிறது. கிராமப்புறங்களில் சங்கங்கள் இச்சௌகரியங்களைப் பெற்றிருந்தால் அதற்குக் காரணம் ஸென்டரல் பாங்கின் முன்னேற்றமே. இராஜதானி முழுவதிலுமுள்ள ஜனங்கள் மார்வாடிகளின் பிடுங்கல்களினின்று விடுபட்டதற்கு ஸர் வி. ஸி. தேசிகாசாரியாருக்கே நன்றியறிவு பாராட்ட வேண்டும்.

பாங்கிவேலையைத் தவிர ஸர். வி. ஸி. தேசிகாசாரியார் கோவாபரேஷனிலும் தீர்க்கமான அறிவார்ந்த அபிமானம் காட்டி யிருக்கிறார். கோகலேயும், ரெவினியூபோர்டு உள்பட இதரர்களும்கூட இந்தியாவில் கூட்டுறவு நாணயம் ஏற்படுவதில் நம்பிக்கையற்ற எண்ணம் காட்டியிருந்தும் ஸர். வி. ஸி. தேசிகாசாரியார் அதற்காகப் பரிந்து பேசினார். சென்னை கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களின் சொஸைடிக்கு எப்பொழுது பணம் தேவையாயிருந்தாலும் தன் சொந்தப்பணத்தையும் தாராளமாகக்கொடுத்து உதவினார். ஆனால் எந்தக் கோவாபரேடிவ் சொஸைடியாவது வியாபாரப் பாங்கிலாவது ஒழுங்கிலாவது குறைவுபட்டிருந்தால் தன் அபிப்பிராயத்தை ஒளிக்காமல் சொன்னார். அவர் எப்பொழுதும் உள்ளதை உள்ளபடி சொன்னவராகையால் ஒருவாறு ஜனாபிமானக்குறைவு இருந்தது. ஆனால் அவர்தனது நாட்டத்தைநன்கு உணர்ந்தவராகையால் இந்தியாவின் க்ஷேமார்த்தமான வேலையில் உண்மையான ஊழியராயிருந்தார். அவருடைய வாழ்நாளைப்போன்ற பெருமை இந்நாட்டில் மிகச்சிலருக்கு மாத்திரமே இருப்பது மிகவும் பரிதபிக்கத்தக்கது.

அவர் திடீரென்று காலஞ்சென்றார். இப்பொழுதுதான் கொஞ்சநாளைக்குமுன் நான் அவரைப்பார்த்தேன். அப்பொழுது அவர் பலஹீனமாயிருந்தாலும் வழக்கத்தைவிட மிக்க அசக்தராயிருந்ததாகத் தென்படவில்லை. அவருடைய மரண சமாசாரம் எனக்கு ஒரு இடிவிழுந்தது போல வந்தது. நவம்பர்மாதம் 15-ம் தேதி காலையில் கடைசியாக அவர் சரீரத்தைப் பார்க்க எனக்குக் கொடுத்துவைத்திருந்தது. என்பக்கமாயிருந்துகொண்டு தீரமாய் ஒரே காரியத்திற்காக என்னுடன் பலவருஷங்களாக உழைத்துவந்தவர் கடைசித் தூக்கத்தில் அமைதியாய் அமர்ந்திருந்தார். வேலையை நன்குசெய்தோம் என்னும் மனச்சாக்ஷியோடேயே அவர் போய்விட்டதுபோலத் தோன்றுகிறது. அவருடைய ஞாபகார்த்தமாய் யாதொரு சின்னமும் அவருக்குத் தேவையில்லை. அவர் இவ்வளவு

காலமாக வசித்துவந்த அவருடைய வீட்டிற்கு எதிரிலிருந்த பாங்கின் கட்டடமே அவருடைய வேலையை எப்பொழுதும் காட்டும் அறிகுறியாயிருக்கும். "சேவக! உனது வேலையை நீ நன்கு செய்தாய்" என்று எல்லாம் வல்ல இறைவனாகிய அவருடைய எஜமான் அவருக்கு அவ்வுலகில் நல்வரவேற்பாளுகை.

---

# கைத்தொழில்களில் கூட்டுறவு இயக்கம்

*தஞ்சாவூர், ஸ்ரீமான், டி. ஆர். ஸ்ரீனிவாச அய்யங்கார், பி. ஏ., எல். டி., எம். ஆர். ஏ. எஸ்., அவர்களால் எழுதப்பட்டது.*

நாணயச்சங்கங்களல்லாத இதர இனங்களில் கூட்டுறவு முயற்சி இதுவரையில் விசாலமாக ஏற்படவில்லை. இராஜதானியில் பலஇடங்களிலும் கூட்டுறவுப் போதனைகள் உபந்யசிக்கப்பட்டு கூட்டுறவில் நெசவுச் சங்கங்களும், கட்டடச் சங்கங்களும் விவசாயச் சங்கங்களும், எருவுச் சங்கங்களும், பாற்சாலைகளும் உணவுப் பொருள் ஸ்டோர்களும், முதலியன விசேஷ ஏற்பாடுகளில் நடைபெற வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு கான்பரன்ஸுகளிலும் இதர இடங்களிலும் பலமாகப் பேசப்பட்ட போதிலும், இவ்விஷயமாக இதுவரையில் செய்யப்பட்ட சொற்ப முயற்சிகளும் அதிகமானப் பிரயோசனத்தைக் கொடுக்கவில்லை. சேணியர்களுள் கூட்டுறவு சொற்பமாகத்தான் பலித்திருக்கின்றது. காஞ்சீபுரத்தில் மிஸ்டர் இராமச்சந்திர சாஸ்திரியாரின் பிடிவாதமான முயற்சியாலும், புதுக்கோட்டையில் மிஸ்டர் தியாகராஜ ஐயரவர்களின் முயற்சியாலும் கொஞ்சம் பிரயோஜனம் ஏற்பட்டிருப்பதைத்தவிர அங்கங்கே ஏற்பட்ட இதர முயற்சிகள் சிறிதளவே பயன்பட்டிருக்கின்றன. கூட்டுறவில் வீடுகட்டுவதைப்பற்றி கான்பரன்சுகளிலும், சட்டசபையிலும் விசேஷப் பேச்சுகள் நடந்தும், இம்பீரியல் கவர்ன்மெண்டும் மாகாண கவர்ன்மெண்டும் அதிக அநுதாபம் காகிதத்தில்மட்டும் காட்டியும், அவ்வேலை இனி வருங்காலத்தில் முடியலாம் என்னும் ஸ்திதியில்தான் இருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் மாத்திரம் "தாழ்ந்த வகுப்பினர்களென்றுச் சொல்லப்படும் ஜனங்களின் உபகாரத்திற்காக ஒரு ஸ்பெஷல் டிப்டிகலெக்டர் நிலம் பெறும் சட்ட நிபந்தனைப்படி அரசாங்கத்தால் அவர்களுக்காக நிலம் வாங்கிக்கொடுக்க ஏற்படுத்தப்பட்டுள்ளார். கவர்ன்மெண்டாரும் அம்மாதிரியான நிலம் பெறுதலை "பொதுவிஷயங்களுக்காக" என்று அருத்தம் செய்து மில்வேலைக்காரர்களுக்கும் குடியிருக்க நிலம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தியன் இண்டஸ்ட்ரியல் கமிஷன் கொண்டுவந்த சிபார்சுகளை நிறைவேற்றிவைக்க ஒருவாறு துவக்கஞ்செய்து விட்டார்கள். முன்னேற்றம் சடுதியில் ஆகவேண்டுமானால் ஏராளமான தொகை



சொற்ப வட்டிக்குக் கிடைக்கவேண்டும். திருப்பிக்கொடுக்கவேண்டிய கெடுவும் நீண்டகாலமாயிருக்கவேண்டும். தற்காலம் வேலைசெய்துவரும் விவசாய, எருச் சங்கங்களின் சங்கியையும் பிராசுதார்களும் விவசாயிகளும் இருக்கும் விசாலமான பரப்பையும் கவனித்து அவ்விடங்களில் இச்சங்கங்களிலிருந்தால் அவைகள் செய்யக்கூடிய நன்மைகளை கவனிக்கும்போது மேற்படி சங்கங்கள் சமுத்திரத்தின் ஒரு சொட்டு ஜலம் போலிருக்கும். இச்சங்கங்கள் செய்யும் வேலையும் அதிகமாய் கவனிக்கப்படுவதில்லை. ஐரிஷ் விவசாய ஏற்பாட்டுச் சொஸைடி மாதிரியாக ஆரம்பஞ்செய்து நடத்தினுலொழிய விவசாயிகளுக்குப் போதுமான உதவி ஏற்படப்போவதில்லை. இராஜதானியின் தலை நகரிலுள்ள கோவாபரேடிவ் ஸ்டோர் ஒன்றைத் தவிர்த்து இதர ஸ்டோர்கள் மங்கின நிலைமையில்தானிருக்கின்றன. கோவாபரேடிவ் பாற்சாலை ஒன்று பெயருக்குக் கூட இல்லை. ஆனால் கவர்ன்மெண்டு உத்தியோக நிபுணர்கள் இதற்காக விசேஷ ஆரவாரம் செய்தகாலம் ஒன்று இருந்தது. இவ்விஷயம் சமீபத்தில் கோயமுத்தூரில் நடந்த விவசாயக் கான்பரன்ஸிலும் ஆலோசனை செய்யப்பட்டது. ஷை விஷயம் ஆரம்பமானகாலத்தில் இப்படிப் பிரயோஜனமற்றுப்போகும் என்று ஒருவரும் நினைத்ததில்லை. ஜனங்களுடைய சுகாதாரத்திற்கு இன்றியமையாததான பசுவின் சுயப்பாலை ஜனங்களுக்கு சப்ளை செய்து குழந்தைகளின் மாணவிகிதத்தைக் குறைப்பதற்காக மாதிரிப்பாற்சாலைகளை கார்பொரேஷன் ஏற்படுத்துவதாகப் பேசப்படுவதைத் தவிர பிரத்தியட்சமாக வேறொன்றும் இதுவரையில் செய்யப்படவில்லை. இம்மாதிரி நிலைமைக்கு அநேக காரணங்களுண்டு. இம்முயற்சியினால் எவர்களுடைய கஷ்டம் நிவர்த்தியாகுமோ அத்தகையோர்களான கைத்தொழில் வகுப்பினர்களும், கொல்லத்துக்கார வகுப்பினர்களும் சாகுபடிக்காரர்களும் கூலிக்காரர்களும் இதை இலக்ஷியப்படுத்தாமல் பாராமுகமாயிருந்ததே அவர்களுடைய ஏழ்மைக்கும், மீளாக்கடனாளியானதற்கும் முக்கிய காரணம். அவர்களுடைய சக்திக்குத் தகுந்தபடி இலகு வட்டியில் எளிதாகக் கடன் கிடைக்கக்கூடிய மார்க்கத்தை நாம் மேற்கொள்ளாவிட்டால் பொருள்விஷயப் போராட்டம் நாளுக்குநாள் விருத்தியடைந்து வெளிநாட்டுப் போட்டியாலும், மெஷினால் செய்யப்பட்ட சாமான்களிருத்தலினாலும் மிகவும் கஷ்டமாகி, பொருட் பாங்கின் வழிகள் தடைபட்டுச் சலனமற்றுப்போனதன் காரணமாயும் நமது நாடு பாராட்டும் பழைய சம்பிரதாய எண்ணங்களாலும், அன்னியதேச வியாபாரங்கள் புகுந்து பெருகிவிட்டதாலும் நமது கைத்தொழில் முதலியவைகள் நசித்தேபோய்விடும். இவ்வகுப்பு ஜனங்கள் இத்தகைய காரணங்களினால் வேலையைக் துவக்கம் செய்யச் சக்தியற்றவர்களாயிருக்க விஷயத்தை ஒழுங்குபடுத்தக் கடமைப்பட்டிருக்கும் அவர்களுடைய தலைவர்கள் தொழிலுக்குப் பொருத்

தமான ஞானமும், ஒழுங்கை அமைக்கும் யுக்தியும், நன்றாய் நடத்தும் சக்தியும், வேலைத்தோதும் முதலிய காரிய ஜயத்திற்கு வேண்டிய இதர இலக்ஷணங்களும் இல்லாமல் தடைபட்டிருக்கிறார்கள்.

இஃதிப்படியிருக்க உலகக் குழப்பமான மகா ஐரோப்பிய யுத்தமும், சரக்குகளின் நடமாட்டத்திற்கு அதனால் ஏற்பட்ட தடையும், யுத்தத்தில் ஈடுபட்ட தேசத்தார்கள் விரோதியைக் கொல்லவேண்டுமென்றும் ஒரே எண்ணத்திலேயே பொருள்களையும சக்திகளையும் நிலைநாட்டியதால் வியாபாரமும் இதர சமாதானமான சௌகரியங்களும் நின்றுபோனதும், சண்டையின் காரணமாக ஆச்சரியமாக விலைவாசிகள் உயர்ந்திருப்பதும் ஆகிய இவைகள் அதற்குத்தக்கபடி கோவாபரேடர்களும் டிபார்டுமெண்டும் நாணயச்சங்கங்களை [illegible]டுத்தி நடத்த முடியா வண்ணம் செய்தன. அப்படி ஏற்படுத்தி நடத்தி யிருந்தால் மேற்கூறிய வகுப்பினர்களுக்கு ஆறுதல் கொடுப்பதோடு தேசத்தின் பொருளுக்கும் அபிவிருத்தியுண்டாக்கியிருக்கும். இந்தச் சண்டை ஏற்பட்டதற்கு நாம் வந்தனை புரியவேண்டும். ஏனென்றால் அதன் ஆரம்ப காலத்தில் நமது இராஜாங்கமும் அதன் நேசதேசங்களும் தயாராயில்லாமலிருந்தும், பாடங்கள் கற்று அதனால் அனுபவங்கள் பெற்றும் ஒருவாறு அவர்களுடைய கண்ணைத்திறந்து விட்டிருக்கிறது. வேறு எவ்விதத்திலும் அவர்களுக்கு இவ்வளவு தெரிந்திருக்காது. இதன் காரணமாக இதுவரையில் ஏதோதானோ வென்று ஒன்றையும் கவனியாமல் காலப்போக்குப்படி இருந்தவர்களெல்லாம் நமதுநாட்டில் கைத்தொழில் மறுபடி நிலைநாட்டப்பட்டு விருத்தியாக வேண்டுமென்று தீவிரமுயற்சி எடுத்துக் கொள்ளுகிறார்கள். நமது கைத்தொழிலபிவிருத்தியாகும் காலம் இவ்வாறு தென்படுகிறது. மேனாட்டுப்பாக்டரி ஏற்பாடுகளும் அதைச்சார்ந்த (ட்ரேட் யூனியனிஸம்,) (ஸிண்டிகாலிஸம்) வேலைநிறுத்தங்கள், தள்ளப்படுதல், டிரஸ்டுகள் சேர்க்கைகள் முதலிய கஷ்டங்கள் நமது இந்தியாதேசத்திற்கும் நிலைமைக்கும் பொருத்தமாகாதது என்றுதள்ளப்பட வேண்டுமானால், கூட்டுறவு தான் அந்த அபிவிருத்திக்கு ஆதாரம். அது இருப்பதன் அடையாளமும் [illegible]ககமும் இறந்துபோய்க் கொண்டிருக்கும் கைத்தொழில்களை புதுமாதிரியில் நிலைநாட்டி புதிய தொழில்களைக் கைக்கொள்ள வேண்டியது. இந்தியன் இண்டஸ்ட்ரியல் கமிஷன் தன்னுடைய தெளிவான ரிபோர்டில் இவ்விஷயத்தை எடுத்து நன்றாய்க் காட்டி யிருக்கிறது. பழைய கைத்தொழில்களை உத்தாரணம் செய்வதிலும், புதிய தொழில்களை ஏற்படுத்துவதிலும் கூட்டுறவு எவ்வளவு உபயோகப்படும் என்பது இனிமேல் தெரியவேணும். எப்படியிருந்தாலும் தற்காலம் காட்டப்படும் சோம்பலும் மெதுவான மலினமும் மாறி செழிப்பும் சுறுசுறுப்புமான வளர்ச்சி ஏற்



பட்டால் நமது தொழிலாளிகள் தரித்திரத்தினாலும் சௌகார்களினாலும் பீடிக்கப்படாமல் தங்களுடைய சுவாதீன நிலையையே பெறுவார்கள். பொருள்கள் விளைய ஆரம்பித்தல் முதல் தொழிலாளிகளிடம் சரக்காக முடிகிற வரையிலும் பிறகு மார்கெட்டுக்குப் போய் வாங்குபவரிடம் சேருகிற வரையில் தொடருகிற தரகர்கள் துரத்தப்படவேண்டுமானால் கூட்டுறவைத்தவிர வேறுவழி சாத்தியமில்லை.

இப்பொழுது சமாதானம் ஏற்பட்டபிறகு நமக்குப் புலப்படுவது என்ன? சமாதான உடன்படிக்கை அமுலுக்கு வருவதற்காக ஒப்புக்கொள்ளப்படு முன்னரேயும், கப்பற் பாரக்கட்டுப்பாடு, வியாபாரக் கட்டுப்பாடு, இவைகளைப்பற்றிய சட்டங்கள் தள்ளப்படுவதற்காகக் கொஞ்சமாய் விடுதலை செய்யப்பட்டு வருகையிலும், யுத்தக் கடனில்லாமல் இதர விஷயங்களில் இலாபகரமாய் உபயோகப்படுத்த முதல்பணங்களை விடுதலை செய்துவருகையிலும், இலாப நோக்கத்துடன் துணியும் வியாபாரங்களே செழித்தோங்கிக்கொண்டிருக்கின்றன. நூற்றுக்கணக்கான ஜாயிண்ட் ஸ்டாக்குக் கம்பெனிகள் பெயருக்குமட்டும் அநேககோடிக் கணக்கான ரூபாய் மூலதனத்தோடு ஏற்படுத்தப்பட்டுவிட்டன. அவைகளுள் சில, வெள்ளியும் கர்ரன்ஸி நாணயமும் கவர்ன்மெண்டில் சில காரணங்களை முன்னிட்டு கிடைக்காமற் செய்யப்பட்டிருக்கிறதைத் தங்களுக்கு அனுகூலமாக்கிக் கொண்டு இலாபமடையப்பார்க்கின்றன. இதெல்லாம் நல்ல காலத்திற்கு வழிதான் என்பதில் தடையில்லை. அப்படியே கூட்டுறவினர்களுடைய ஆலோசனைக்கும் நினைவிற்கும் இலக்காவதற்கு அநேக விஷயங்களுள்ளன. இவர்கள் சடுதியாகக் காலாகாலத்தில் முன்னுக்குவந்து பரபரப்பாய் வேலைகள் துவக்காவிட்டால் மேற்கூறியவர்கள் முன்னேறி எல்லாவற்றையும் கைக்கொள்ளுவார்கள். "இனி என்செய்வது? காலந் தப்பிவிட்டது."என்ற அபவாதத்திற்குள்ளாகாமல் காத்துக்கொள்ளவேண்டுமானால் கூட்டுறவினர்களாகிய நாம் "கைத்தொழில்களில் கோவாபரேஷன்" என்னும் விஷயத்தை எல்லாப்பாங்கிலும் ஆழ்ந்து ஆலோசித்து அதுஜயமடையும்படியான தீர்மானத்தைச் செய்யவேண்டும். சோம்பலா யிருக்கக்கூடிய காலம் மாறிவிட்டது. சுறுசுறுப்பாக இருக்கவேண்டிய காலம்வந்துவிட்டது.

ஆகையால் பிரமுகர்களான கோவாபரேடர்களைக் கொண்டு தேவையானால் அவர்களுடைய சங்கியையை சிநேகிதர்களைக் கொண்டும் அனுதாபர்களைக் கொண்டும் கூடப் பெருக்கிக் கொள்ளலாம் என்றஅதிகாரத்துடன் ஸப் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தி கைத்தொழிற் கோவாபரேடிவ் சொஸைடிகளையும், கொல்லத்துக்காரர்கள், தொழிலாளிகள் இவர்களுக்காகச் சொஸைடிகளையும் ஸ்தாபிக்கும் விஷயங்களை ஆராய்ந்து சட்டங்கள் [illegible]வும், கோவாபரேஷனால் ஆகக்கூடிய தொழில்களைத் தேர்ந்

தெடுத்து, அவைகளை நடத்தவும் மூலதனம் போடவும் சாமான்கள் வாங்கி அதைப் பண்டமாக்கி கிரய விக்கிரயங்களுக்கு மத்தியஸ்தலம், பரஸ்பர சகாயம், முதலியன ஏற்படுத்தவும் அவர்களால் நடத்தப்படும்படி செய்யவேண்டுமென்று நான் தீவிரமாய் பிரஸ்தாபிக்கிறேன். அநேக விதமான குடிசைக் கைத்தொழில்களையும், பாக்டரிகளையும், ஓர்க்ஷாப்புகளையும் ஏற்படுத்தல், பலவிதமான மில்லுகளை இயக்குதல், எளிதாய் வேலை முடிக்கிற நவீன இயந்திரங்களை மொத்தமாகக் கூட்டுறவில் வாங்கி சப்ளை செய்தல் சரக்குகளை வாங்கப்படுவது முதல் சாமானாக ஆக்கப்படும் வரையில் கவனித்தல், குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கு வேண்டிய சௌகரியங்களையும் இடங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தல் முதலிய இம்மாதிரியான விஷயங்கள் கமிட்டியின் சோதனைக்கு இலக்காகும். அடுத்த வருஷத்திற்குள் இம்முறையில் ஏதாவது நிறைவேறினால் இன்னம் அதிகமான முயற்சி செய்ய வழிகாட்டி யாவதோடு, கூட்டுறவு மார்க்கங்களையே பொதுவாய் ஒழுக்கத்தில் உயர்த்தி நம்முடைய வேலையையும் சிறப்பிக்கும். வாய்ப்பேச்சாக ஆயிரக் காரியங்கள் பேசுவதைக்காட்டிலும் பிரத்தியட்சமாக ஒரு காரியத்தையேனும் முடித்துக் காட்டுவதே மேலானதாகும்.

—— ——

## ஏழைகளுக்கு வீடமைத்தல்.

[ஆனரெபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி அய்யரவர்கள், சென்னை கவர்னரான லார்ட் வில்லிங்டன் துரையவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஓய். எம். ஸி. ஏ. யில் படித்த வியாசத்தின் சாராம்சம்.]

“ஜனங்கள் மகா துன்பப்பட்டுக்கொண்டு வசித்துவரும் கஷ்டமான இடங்களையும் நிலைமைகளையும் வர்ணித்து அதைத் தவிர்க்கக்கூடிய மார்க்கங்களைக் கதா ரூபமாகக் காட்ட ஏற்பாடாய் முயன்றிருக்கிறேன். மேலும் மேலும் பிரத்தியக்ஷப் பிரமாணங்களினால் இதரச்சீர்திருத்தங்களுக்குமுன் வசதிச் சீர்திருத்தமே அவசியமாய் அமைய வேண்டுமென்றும், அது இல்லாமல் இதரச் சீர்திருத்தமெல்லாம் பயனற்றதாகுமென்றும் காட்டி வந்திருக்கிறேன்.” என்று சார்ல்ஸ்டிக்கன்ஸ் எழுதியிருக்கிறார்.

சென்னையில் தாழ்ந்த வகுப்பினர்கள் வசிக்கும் அநேக வீடுகள், வீடுகள் என்றே சொல்ல யோக்கியதையற்று காற்றோட்டமில்லாமல் சுகாதார நிலைமைகள் கொஞ்சமும் கவனிக்கப்படாமலிருக்கின்றன. இப்பொழுது இவ்வீடுகளைப்பற்றி நாம் எப்படி கவனிப்பது என்பது கேள்வி? மேலும் வீட்டுக்காரர்களின் வாடகையை அதிகப்படுத்தும் பேராசையினால், இச்சனங்கள் வயிற்றுச் சோற்றைபற்றிக் கவனிக்கக் கூட முடியாமற் போகிறது. தங்கள் உணவு உடைச் சிலவுகளைக் குறைத்தேதான்



22559

வீட்டுக்காரர்களுக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இம்மாதிரி அரைப்பட்டினியினாலும் அதிகாரிகளினால் ஏனோதானோ என்று கவனிக்கப்படுவதினாலும் இவர்கள் பயங்கரமான வியாதிகள் உதிக்கு ஆஸ்தானங்களாகி அவ்வியாதிகள் எல்லா நிலைமைகளிலுமுள்ளவர்களுள்ளும் பரவிக் கொடுமை புரிவதற்குக் காரண பூதர்களாகிறார்கள். இம்மாதிரி நம்மை சுற்றிலுமிருக்கும் கொடுமைகளை முற்றிலும் நிவர்த்தி செய்யாவிட்டாலும் அவைகளைக் குறைப்பதற்காவது ஏதாவது செய்யவேண்டும். இதற்காக அநேக பிரஸ்தாபங்கள் செய்யப்பட்டுள்ளன. அவைகளுள் சில வற்றைக்கவனித்து அவைகளின் பரிகாரங்களையும் பிரரேபிக்க முயல்கிறேன்.

முதல் முதல், தற்காலத்திய கட்டடங்களை இடித்து புதுமாதிரியான கட்டடங்கள் அமைக்கும் ஆலோசனையை சென்னைக்குப் பொருத்தமாகாது என்று தள்ளிவிடலாம். சென்னையைப்பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியுமாகையால். ‘நகர அமைப்பு ஏற்பாட்டுப் பத்தியில்’ ஏழைகளுக்கு வீடமைத்துக் கொடுக்கும் யோசனை பயனற்றதாகவும் நஷ்டமாகவும் முடியும். சென்னைத் தொழிலாளியின் சம்பாத்திய சக்தி மிகக் குறைவு. இதர வரும்படிக்கும் இடமில்லை. இவ்வாலோசனையை அமுலுக்குக் கொண்டுவந்தால் இவ்வேழைகளுக்கு சௌகரியமான வீடுகளில் வசிக்க உரிமையே இல்லாமற் போகும். நான் இப்படிச் சொல்வதனால் போட்ட பணத்திற்கு வட்டி முதலிய வரும்படிகளைக் கவனிக்காமல் பரோபகார சிந்தனையோடு ஏழைகளுக்காக சுகாதாரமுறையில் வீடு கட்டிக் கொடுக்கும் தர்மிஷ்டர்களைத் தடை செய்வதாக நினைக்கக் கூடாது. இன்று மாலை என்பேச்சு தர்மத்தைப்பற்றியதல்ல. வீடுகட்டுதல் ஜனங்களின் குடியிருப்புக்கு மாத்திரமே யொழிய அவர்களுக்கு சுதந்தர பாத்தியத்திற்கல்ல என்றிருக்கிறவரையில் கட்டடங்கள் தனிஜனங்களின் ஏற்பாட்டிலாவது தர்மிஷ்டர்களின் ஏற்பாட்டிலாவது அமையப் பெறலாம். ஆனால் இத்தர்மிஷ்டர்களின் வார்சுகள் குடித்தனக்காரர்களின் திக்கற்ற நிலைமையையும் தன் பேராசையையும் சாதனமாக வைத்துக் கொண்டு வாடகையை உயர்த்தவாவது இல்லாவிட்டால் அவர்களை வெளியே துரத்தவாவது செய்வார்கள். இம்மாதிரி சென்னையில் எப்பொழுதும் நடந்துவருகிறது. ஆகையால் ஏழைகளுக்கு வீடமைத்துக் கொடுத்து காலக்கிரமத்தில் அவர்களை அவரவர்களிருக்கும் வீட்டிற்குச் சொந்தக்காரர்களாக்கும் முறையையே கவனிக்கிறேன். இருக்கும் வீடுகளைச் சீர்திருத்தல், புதுவீடுகள் கட்டுதல், தொழிலாளிகள் தாங்கள் வசிக்குமிடத்திற்கே சொந்தக்காரர்களாகும்படி செய்தல் ஆகிய இவ்விஷயங்கள் இங்கிலாந்தில் கவனிக்கப்பட்டு அப்போதப்போது பார்லிமெண்டில் ஆலோசிக்கப்பட்டு அநேக நடவடிக்கைகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஷாப்ட்ஸ்பரிப் பிரபுவின் தர்ம சிந்தனையே முக்கிய காரண

மாக 1851-ம் வருஷயத்திய ஆக்டு முதலில் ஏற்பட்டு இவ்விஷயத்தைப்
பற்றி அநேக மிகப் பயனுள்ள ஏற்பாடுகள் பிறகு உண்டாக்கி யிருக்
கின்றன. அவைகள் குறிப்பது என்னவென்றால், போதுமான வசதி,
அதிக வீடுகள் கட்டுதல், சுகாதாரத்திற்கு சொந்தக்காரரை ஜவாப்தாரி
யாக்குதல், நிர்வாகத்தை வகிக்க லோகல் அதிகாரிகளுக்கு அதிகாரம்
கொடுத்தல் முதலியவைகளே. இவ்விஷயத்தைப்பற்றி அநேக இராஜீயக்
கமிஷன்கள் இருந்திருக்கின்றன. பம்பாயில் கூட்டுறவில் வீடமைக்கும்
விஷயமாய் விடாமுயற்சியுடன் உழைத்துவரும் ராவ்பகதூர் எஸ். எஸ்.
தால்மாகி 1916-ம் வருஷம் ஜுலை மாதத்தில் வெளியாக்கின தன்னுடைய
10-வது நெம்பர் துண்டுப்பத்திரிகையில் இங்கிலாந்திலும், வேல்ஸிலும்,
ஏழைகளுக்கு வீடமைப்பதற்காக 5-கோடி ரூபாய்களுக்குமேல் லோகல்
உத்தியோகஸ்தர்களிடம் கொடுக்கப்பட்டன வென்றும், 5-கோடி ரூபா
யும் 2-கோடி ரூபாயும் அநேக தர்ம சங்கங்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்
களுக்கும் கொடுக்கப்பட்டனவென்றும், 3½-கோடி ரூபாய் சிறிய ஸ்தாவர
சொத்துக்கள் நிலப்பிரிவினைகள் இவைகளைப்பற்றிய சட்ட அனுசரணைப்
படி கொடுக்கப்பட்டதென்றும், 25 லக்ஷரூபாய் சிறிய வீடுகள் பெறும்
சட்டப்படிக்கும், ரூபாய் 51-லக்ஷம் தீர்மானிக்கப்பட்ட நிலச் சட்டப்
படிக்கும் 17-லக்ஷம் நிலச் சீர்திருத்தச் சட்டப்படிக்கும் கொடுக்கப்
பட்டனவென்றும் காட்டுகிறார். இச்செலவு 1913-ம் வருஷம் வரையில்
இவ்வேராளமான செலவு போதாது என்று இங்கிலாந்தில் கருதப்பட்டு
அப்போதப்போது இராஜாங்கக் கமிஷன்கள் ஏற்படுகின்றன. அவர்களு
டையதீர்மானங்களினால் லோகல் உத்தியோகஸ்தர்கள் ஏழைளுக்கு இல்ல
மமைப்பதற்காக அதிகக்கடன்வாங்கும் சக்தியைப் பெறுகிறார்கள். 1914ம்
வருஷத்திய செப்டம்பர்மாதம் 11-ம்தேதி லண்டன் கஜட்டில் "வீடமைக்
கும் ஆக்டு, சிறிய ஸ்தாவர சொத்துகளைப்பற்றிய ஆக்டு ஆகிய இவைகள்
சம்பந்தமான எவ்விஷயத்திற்கும் வருஷம் ஒன்றுக்கு 100-க்கு 4 வட்டி
வீதம் லோகல் உத்தியோகஸ்தர்களுக்குக் கடன்கள் கொடுக்கப்பட
வேண்டும்" என்றும் எழுதப்பட்டிருக்கிறது. பிரிடிஷ் இந்தியாவிற்கு
அநேக மாதிரியில் வழிகாட்டியாக விருக்கிற மைசூர் சமஸ்தானத்தில்
கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல வீடுகட்டிக்கொள்வதற்
காக கடன் கொடுக்கிறார்கள். 1903-ம் வருஷத்திய மைசூர் நகரச் சீர்
திருத்த சட்டம் 3-வது நெம்பர் பிரகாரம் வட்டி விகிதம் 100-க்கு
2-தான் ஏற்பட்டிருக்கிறது. கடன்களும், சாமான்களின் விலை அல்லது
வேலையின் செலவுகளின் பேரில் 100-க்கு 75 வரையில் கொடுக்கப்
படுகின்றன. இங்கிலாந்திலும் மைசூரிலும் செய்யப்பட்ட வேலைகளைக்
குறிப்பித்துவிட்டு சென்னை கவர்ன்மெண்டை ஸெண்ட்ரல் ஹௌஸிங்
சொஸைடிகளுக்கு 100க்கு 4 ரூபாய்க்கு மேற்படாத வட்டியில்



கடன் கொடுக்கச் சொல்லுவது முறை தவறான பளுவாகாது
என்று நினைக்கிறேன். சில கோவாபரேடிவ் ரஜிஸ்ட்ரார்களும் மற்ற
வர்களும் பிரஸ்தாபித்தபடி (அதாவது ஸெண்ட்ரல் பாங்கிலிருந்து
கடன்வாங்கல்) நடத்தல் சாத்திய மாகாத விஷயம். செண்ட்ரல் பாங்கி
கள் குறுகிய காலங்களுக்குத்தான் கடன் கொடுக்கும். அவர்களுடைய
வட்டிவிகிதமும் நியாயமான காலத்திற்குள் கடன் வாங்குபவனுக்கு
வீட்டுக்கு உரிமை சம்பாதித்துக் கொள்ளக்கூடியதாயில்லை. ஆகவே
சென்ட்ரல் பாங்கிலிருந்து கடன் வாங்கும் ஆலோசனை தவிர்க்கத்தக்
கது. பொது ஜனங்களின் உதவியைக் கோருதலும் தவிர்க்கத்தக்கது.
ஆஸ்தியின் விலையில் ஐந்தில் நான்குபாகம் கடன் கொடுக்கும் வீடுகட்டும்
சங்கத்தின் தொகையோடு அன்னியர்களிடம் ஏதாவது உபகரிக்கலாம்.
இதைத்தவிர ஜனங்களிடம் விசேஷமாய் சந்தா வாங்கலாம் என்று
நினைப்பது பிரயோஜனப்படாது. இங்சந்தர்ப்பத்தை யொட்டி "வீடுகட்
டுதல், நகர அமைப்பு, முதலிய 1919—ம் வருஷத்திய சட்டம்" என்று
சமீபத்தில் பார்லிமெண்டினால் சம்மதிபெற்ற ஏழைகளுக்கு வீடமைக்
கும் சட்டம் கவனிக்கத்தக்கது. அதில் இந்தியாவிலும் பொருத்த மா
கும்படியான விஷயங்களிருக்கின்றன. ஏழாவது செக்ஷனில் கடன்
திருப்பிக்கொடுக்கும் மிக்க உயர்ந்தகாலம் 80 வருஷங்கள் என்று குறிப்
பிடப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் அவ்வளவு நீண்டகாலம் அவசிய
மாயிராது. இதைக்காண்பிப்பது எதற்காக வென்றால் இங்கிலாந்தில் கூட
கடன் திருப்பிக்கொடுக்க நீண்டகாலம் கொடுக்கப்படுகிறது என்பதைக்
காட்டவே. ஆக்டின் 9 முதல் 14 வது செக்ஷன்வரையில் தனியான
கவனம் செலுத்தற்பாலது. அது பலாத்காரமாய் இடம் பெறுவதைப்
பற்றிச் சொல்லுகிறது. கவர்ன்மெண்டார் முனிசிபாலிடிகளுக்கும் இதர
ஏஜன்ஸிகளுக்கும் சொந்தக்காரர்களிடமிருந்து பலவந்தமாய் நிலம்பெற
அதிகாரம் கொடுக்க வேண்டும். 1919—வது வருஷ ஆக்டில்கண்ட
விஷயங்கள் இந்தியசட்டங்கள் அனுசரிக்க வேண்டிய மாதிரியாக இருக்க
வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிடுவது ஒன்று. அதாவது
இங்கிலாந்திலுள்ள லோகல் அதிகாரிகளுக்கு இவ்விராஜதானியிலுள்ள
முனிசிபாலிடிகளையும் லோகல் போர்டுகளையும்விட விசேஷ அதிகாரங்
கள் இருக்கின்றன. இவ்விடத்திலும் லோகல் போர்டுகளுக்கு அவ்வித
மான அதிகாரம் கொடுத்தால் வேலை சுளுவாகலாம். பெரிய நகரங்களில்
வீடமைக்கும் சங்கங்களேற் படுத்தி அவைகளுக்கும் அம்மாதிரி அதிகா
ரம் கொடுக்கலாம். இங்கிலீஷ் ஆக்டின் 16—வது செக்ஷனில்,
பொதுப்பிரயோஜன சொஸைடியாவது, வீடுகட்டும் டிரஸ்டாவது எந்த
மாதிரியில் உபகரிக்கப்படலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.
17-வது செக்ஷன் இப்பொதுப் பிரயோஜன சொஸைடிகளுக்குக் கடன்

கொடுப்பதைப்பற்றிச் சொல்லுகிறது. சமீபத்தில், லோகல் கவர்ன்மெண்ட் போர்டாரால் இங்கிலாந்தில் பிரசுரிக்கப்பட்ட புல்லட்டின் ஒன்றில் இவ்விஷயம் விஸ்தாரமாய் சொல்லப்படுகிறது. "பொதுநலச் சொஸைடிகள் பெறக்கூடிய உதவி" என்னும் தலைப்பின் கீழ் பின் வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"ஒரு பொதுநலச் சொஸைடி இரண்டு வழிகளில் உதவி பெறலாம்—இரண்டில் எதுவானாலும் சரி—அதாவது அதன் எல்லையிலுள்ள கவர்ன்மெண்டிடமிருந்தும் லோகல் அதிகாரத்திடமிருந்தும் பெறலாம். லோகல் அதிகாரம் கௌண்டி கௌன்சில், டவுன் கவுன்சில் அல்லது டிஸ்ட்ரிக்ட் கௌன்சில் இதில் எதுவானாலும் சரியே. கவர்ன்மெண்டு உதவி இரண்டுவிதம்.

(1) பணம் கடன் கொடுத்தல். (2) பணம் இனாம் கொடுத்தல்.

(1) கடன் கொடுத்தல்.—பொதுநலச் சொஸைடிகளுக்கு இதுகாறும் இராஜாங்கத்திலிருந்து கடன்பெற முடிந்தது வாஸ்தவமே. ஆனால், புதிய ஏற்பாட்டின்படி இன்னம் ஏராளமாய் வாங்கலாம். முன்பு, நிலம் கட்டினவீடு, இவைகளின் விலையின்பேரில் மூன்றில் இரண்டு பங்குதான் கடன் வாங்க முடிந்தது. புது ஏற்பாட்டின்படி முக்காற் பங்கு வாங்கலாம். தற்காலக் கூலியையும் சாமான் விலையையும் கவனித்தால் இந்த முக்காற் பங்கு என்பது மூன்றில் இரண்டாயிருந்ததைவிட எவ்வளவோ அதிகம். ஏனென்றால் இப்பொழுது கட்டும் வீட்டின் தற்கால விலை அதற்குச் செலவான பணமவ்வளவு இருக்கவே இருக்காது.

(2) கவர்ன்மெண்டு இனாம்.—பொதுநலச் சங்கத்திற்கு கடன்கள் கொடுப்பதோடு கவர்ன்மெண்டு இனாம்கள்கூடக் கொடுக்கும். இது ஆறு மாதத்திற்கொரு தடவையாகக் கொடுக்கப்படும். ஒவ்வொரு சங்கத்தின் இனாமும் அது கவர்ன்மெண்டிலிருந்து கடன் பெறுவதற்கு உரித்தான மொத்தத்தொகையில் ஒவ்வொரு காலத்திலும் வட்டிக்கும் முதலுக்கும் ஏற்படும் அம்சத்தில் ஐந்தில் இரண்டு பங்காக இருக்கும். இவ்வுரித்தான தொகையை வாங்கியிருந்தாலும் இல்லாவிட்டாலும் பரவாயில்லை.

இவ்வாறு ஒரு சங்கம் 4,000 பவுன் செலவில் வீடுகள் கட்ட ஏற்பாடு செய்து அதற்காக அரசாங்கத்திலிருந்து 3,000 பவுன் கடன் பெறுவதாக வைத்துக்கொள்வோம். வட்டி $5\frac{1}{2}$ யாக வைத்துக்கொண்டு வருஷச் சந்தா கெடுவில் திருப்பிக்கொடுப்பதாய் ஏற்படுத்திக்கொண்டிருந்தால் இக்கடனுக்காக வருஷாவருஷம் முதலுக்காகவும் வட்டிக்காகவும் சுமார் 1,770 பவுன் கொடுக்கவேண்டியதாக ஏற்படுகிறது. அச்சங்கம் உரிமை பாராட்டக்கூடிய கவர்ன்மெண்டு இனாம். ஷை 1,770 பவுனில் ஐந்தில் இரண்டு பாகமாகும், அதாவது 708 பவுன். ஆகவே சங்கம் கொடுக்க



வேண்டியதாய் ஏற்படும். பாக்கித்தொகை 1,062 பவுனும் வேறிடங்களில் வாங்கவேண்டிவரும் 10,000 பவுன் கடனுக்கு வட்டியும் நிர்வாக செலவுமே இத்தொகை கட்டப்பட்ட வீடுகளின் வாடகையைக் கொண்டு அடைக்கவேண்டியது.

இவ்வேற்பாடுதான் சென்னைக்குத் தேவை. சென்னையிலும் சுற்றுப்புறங்களிலும் இப்படிப்பட்ட சங்கங்கள் ஸ்தாபனமாக, சட்ட சபை ஏற்பாடு செய்யுமாயின் விஷயம் எளிதாய் முற்றுப்பெறும்.

---

## குடிசைக் கைத்தொழில்களும் கோவாபரேடிவ் ஸ்டோர்களும்.

[எச். டப்ளியூ உல்ப்துரையவர்களால் எழுதப்பட்டதின் சாராம்சம்.]

இந்திய அபிமானி ஒருவன் அத்தேசத்தில் கூட்டுறவு ஏற்பாட்டினால் குடிசைக் கைத்தொழில்கள் விருத்தியாவதையும் வீட்டுக்கு வேண்டிய சாமான்களைக்கொடுக்க கோவாபரேடிவ் ஸ்டோர்கள் ஏற்படுவதையும் கண்டு ஊக்கமடையாமலிருக்கமுடியாது. இதனால் தெரிகிறது என்னவென்றால் எல்லாவற்றையும்விட இன்றியமையாததானகூட்டுறவு நாணயமானது இலகு வட்டிக்கடன்கள் கொடுப்பதுமல்லாமல் தனது பொதுவான பிரயோஜனத்தையும் ஒருவாறு உணரும்படி செய்திருக்கிறது. குடிசைக் கைத்தொழில்கள் ஜெயிக்கவேண்டிய முக்கிய கஷ்டம் சரியான விற்பனையிடம் ஏற்படவேண்டியது என்று நன்கு தெரிந்தவிஷயம். இதற்காக உதவி செய்யும்பொருட்டு, ஏற்கனவே கல்கத்தா பத்திரிகை ஒன்றில் தெரிவித்திருக்கிறபடி ஒரு பெரிய லண்டன் நகரத்து ஸ்டோர் மானேஜரிடம் பிரஸ்தாபித்திருக்கிறேன். அவரும் இப்பிரேரணையை அன்புடன் ஏற்றுக்கொண்டிருக்கிறார். இப்பெரிய ஸ்டோர்களில் தற்காலம் "ஜப்பான் டிபார்டுமெண்டு என்று" ஒரு பிரிவு நிலைபெற்றிருக்கிறது. அதில் சூரியன் உதிக்கும் தேசம் என்று வழங்கும் ஜப்பானில் விசேஷமாய் விருத்தியாகும் குடிசைக் கைத்தொழிலினாலாகும் சரக்குகள் விற்பனைக்கு வைக்கப்படுகின்றன. இவைகள் நன்கு விற்பனையாவதோடு சிலாகிக்கவும் படுகின்றன. இந்த மாதிரி "இந்தியா டிபார்ட்டுமெண்டு" என்று ஏன் ஒரு பிரிவு அதே ஸ்டோரில் இருக்கக்கூடாது என்று அம்மானேஜரைக் கேட்டேன். பிரிடிஷ் ஜனங்கள் தற்காலத்தில் 'யூனியன் ஜாக்'கொடி நிழலிலிருக்கும் நாடுகளின் சாமான்களையே வாங்கி அவைகளை ஆதரிக்க வேண்டுமென்னும் தேசாபிமானமுள்ளவர்களாயிருக்கிறார்களென்றும் இந்தியக் குடிசைக் கைத்தொழில் ஆதரித்தல் மெச்சத்தகுந்த தேசாபிமானமாகுமென்றும் சொன்னேன். இதற்கு அவர் கொடுத்தபதில் என்னவென்றால் முதலாவது இந்தியக் குடிசைக் கைத்தொழில்கள் ஜப்பானைப்போல் ஒரு ஏற்பாடாய் அமையவில்லை. அவர்களுள் ஐக்கிய

பத்தியம் கூட்டுறவு முறையில் இருப்பதாகத் தெரியவில்லை. இரண்டாவது, ஜப்பான் சாமான்கள் அவசியமான தேவைகளை அனுசரித்ததாக இருக்கிறபடியால் உடனே விற்பனையாய் விடுகின்றன. இந்தியக் குடிசைச் சரக்குகளோ அவ்வளவு உபயோகமுள்ளதாயில்லை, என்றார். ஆனால் இந்தியக் குடிசைக் கைத்தொழிலினால் செய்யப்பட்ட உபயோகமான சரக்குகளை விற்பனையாகாவிட்டால் வாபீஸ் செய்யலாமென்று பரிக்ஷார்த்தமாய் அனுப்பினால், தான் அதை பகிரங்கத்தில் காட்டி, நோக்கம் எப்படி யிருக்கிறது என்று தெரிந்துகொண்டு அனுகூலமாயிருந்தால் அதைத் தன் வியாபாரத்தில் நிலைநாட்டுவதாகவும் சொன்னார். இம்மாதிரி இவர் செய்யும் பக்ஷத்தில் இவருடைய போட்டிக்கார வியாபாரிகளும் இதைப் பின் பற்றுவார்கள். இப்படியாக ஒரு விற்குமிடம் இந்நாட்டில் ஸ்தாபிக்கப்படும். இப்பொழுது முதல் கேள்வி: இந்தியக் குடிசைக் கைத்தொழில்கள் தேவையான சரக்குகளை ஒரு ஏஜன்ஸிமூலமாய் வேண்டிய மாதிரியில் செய்தனுப்பமுடியுமா? இரண்டாவது, நஷ்டம் ஒருவேளை வந்தால் அதைத் தாங்கிக்கொள்ளும்படியான முதலாளிகள் கிடைப்பார்களா? துணிகரமான முதலாளி கிடைத்து வியாபாரம் விருத்தியாய் விட்டால் இந்தியாவுக்கு எவ்வளவு இலாபம் என்பதைக் கவனித்தால் இந்தியாவிலும் இத்தேசத்திலும் பொறுப்பு வகிப்பவர்கள் அநேகர் இருக்க வேண்டும். ஆரம்பிக்கவேண்டியது இந்தியாவின் வேலை. அங்கே சரியான ஆரம்பம் துவக்கிவிட்டால் இவ்விடத்து விஷயங்களை நாங்கள் கவனிக்கமுடியும்.

**அடுத்த விஷயம் ஸ்டோர்களைப்பற்றியது.**—சுமார் ஒருவாரத்திற்கு முன்னே தான் இந்தியக் கூட்டுறவுச் சரிதத்தில் நல்ல பெயரெடுத்திருக்கிற சென்னை மாகாணத்தின் ரிஜிஸ்ட்ரார் அவர்களிடமிருந்து கவனிக்கத் தகுந்த ஒரு கடிதம் வந்தது. ஐரோப்பாவின் கூட்டுறவுப் பழக்கத்தைப் பற்றி விசாரிக்கும்படி தன் உத்தியோகஸ்தருள் ஒருவரான ஸர். எப். நிகோல்ஸன் துரைக்குச் சொன்னவர் சென்னை கவர்னராயிருந்த காலஞ்சென்ற லார்டு வென்லாக் என்னும் பிரபுவே. அவ்விசாரணை அசாத்தியப் பெருமைவாய்ந்த ரிபோர்டாக முடிந்தது. அந்தப்பிரபுவே 1910-ம் வருஷத்தில் என்னால் தயாரிக்கப்பட்ட மசோதாவை (Bill) பிரபுக்களின் சபையில் வைத்து அதை கியாதியான வெற்றிபெறும்படி செய்தார். அதன்நோக்கம் என்னவென்றால் இந்தியாவுக்கு நான் இப்பொழுது மன்றாடிக் கொண்டிருப்பது போலவே அயர்லாந்துக்காக மன்றாடினது. அதாவது எமரல்ட்தீவு ஜனங்களுள் கோவாபரேடிவ் ஸ்டோர்வேலையைப் பெருக்கி இந்தியர்களை மார்வாடிகள் நெருக்கிக் கொடுமைபுரிவதுபோல் பாணியர்களால் அவர்கள் பட்ட துயரத்தையும் கொடுமையையும் மாற்றுவதற்காகவே.



நமது பிரிடிஷ் ஸ்டோர்கள் ராக்டேல் மாதிரியில் நடத்துவதாக வைத்துக்கொண்டால் அதாவது காலவிலைப்பிரகாரம் விற்று ஆறுமாதத்திற்கொருமுறை கொள் முதலுக்குமேல் ஏற்படும் தொகையை மெம்பர்களுக்குத திருப்பிக்கொடுப்பதாய் வைத்துக்கொண்டால் வாங்குபவர்களுக்கு 100-க்கு 10 இலாபமாகிறது. குறைந்தபக்ஷம் இந்தத்தொகை வியாபாரிக்குப் போகிறது. இம்மாதிரி வாரத்திற்கு ஒரு ரூபாயினால் வருஷத்திற்கு 52 ரூ ஆகிறது. பணம் சேர்க்க இதைவிட எளிதான வழியில்லை. இந்தியா முன்னுக்குவரத் தயாராயிருக்கிறது என்பதைக்காட்டும் கடிதம் மிஸ்டர் ஹெமிங்வேயிடமிருந்து வந்த உடனே மான்செஸ்டரிலுள்ள பெரிய மொத்த கோவாபரேடிவ் சொஸைடியின் ஏற்றுமதிக் கமிட்டி சேர்மனாகிய எனதருமைச் சிநேகருக்குத் தெரிவித்தேன். இவ்விஷயத்தை கவனிக்கவேண்டியது அந்த ஏற்றுமதிக் கமிட்டியே. மொத்தவியாபார சொஸைடியின் உதவி வேண்டியது அவசியம் என்பது அவருடைய பதிலினால் தெரிகிறது. ஏற்கனவே அச்சொஸைடி, கனடா, நியூபௌண்ட்லாண்ட், தென் ஆபிரிக்கா, ஹாங்காங் இவிடங்களிலுள்ள சங்கங்களுக்கு மொத்த விலைக்கு சரக்குகள் அனுப்பிவருகிறது. ஆகையால் அது இந்தியா விஷயத்திலும் அப்படியே நடந்துகொள்ளுமென்பதில் ஆக்ஷேபமில்லை. வேண்டியதெல்லாம் ரிஜிஸ்டரான சொஸைடிகளிலிருந்து வியாபாரத்திற்குகந்த பிரஸ்தாபம் வரவேண்டியதே. மொத்த வியாபார சொஸைடிக்கு அனுப்பவேண்டியது மனுதாரனுக்குத் தேவையான சரக்குகளின் ஜாபிதாவும் பணம் எப்படிக்கொடுக்கிறது, எந்த ஏஜன்ஸி ஜவாப்தாரி, என்ற ஸ்டேட்மெண்டுமே. இதெல்லாம் திருப்திகரமாயிருந்தால் வியாபாரத்தில் தடையாதொன்றுமில்லை. இம்மாதிரியான பிரஸ்தாபம் வந்தால் தான் நன்கு கவனிப்பதாக எனது நண்பர் சொன்னார். இம்மாதிரி ஏற்பாடுகளினால் சரியான வழிகளில் பணம் புரண்டு உலகமும் இந்தியாவில் பெரும்பாகத்தினரும் மிக்க தனிகர்களாகி ஐக்கிய ராஜாங்கத்தில் முதல்தரமான வியாபார அமைப்புகள் ஏற்படுத்தி கோவாபரேஷன் இங்கிலாந்தின் தொழிலாளிகளுக்குச் செய்திருக்கும் பிரயோஜனம்போல எல்லாருமே பயனை அடையும்படி செய்யும். இனி இந்தியா ஒருமித்துக் கூட்டுறவினால் ஒரு மத்தியஸ்தலம் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஏற்படுத்தி அல்லது ஒவ்வொரு ஜில்லாவிற்குமாவது ஏற்படுத்தி மான்செஸ்டர் சொஸைடியுடன் வியாபாரம் செய்யத்தகுந்த ஒருமைப்பட்ட சக்தியுள்ளதாக ஆக்கிக்கொள்ளவேண்டும். கவர்ன்மெண்டு சிப்பந்திகள், வியாபார சிப்பந்திகள், முனிசிபல் சிப்பந்திகள் இவர்களுக்காக ஏற்படுத்திக்கொண்டிருக்கும்

பலசங்கங்கள் இவ்வேலையில் ஈடுபட்டு இதை இலகுவாக்கிக்கொடுக்க வேண்டும். பம்பாயில் மிஸ்டர் இயூபாங்க் தீவிரமாய் விருத்திசெய்து வருகிற பள்ளிக்கூட மாணவர்களின் சங்கங்களும் சிறிது உபகரிக்கலாம். நகரத்து ஜனங்கள் வேலையில் முதன்மையாயிருப்பார்கள் என்பதில் தடையில்லை. ஆனால் கிராமத்தார்களும் அம்மாதிரி ஆக யாதொரு அப்பியதாமுமில்லை. ஸ்விட்ஜர்லாந்திலும், ருஷியாவிலும் ஸ்டோர் ஏற்பட்டு அநேக சாவுகார்கள் வேலையில்லாமல் ஓடும்படியாயிற்று. அதனால் பணத்திற்குத் தகுந்த அப்பட்ட சரக்குகளும், குறைந்த பணச்செலவும் ஜனங்களுக்கு ஏற்பட்டதோடு ஸேவிங்ஸ் பாங்கில் போடுவதுபோல சிறிய தொகைகள்கூட அவர்களுக்கு இலாப அம்சத்திலிருந்து சேர்ந்துகொண்டு வருகிறது. இவ்விஷயத்தை இந்தியாவிலுள்ள எல்லாக் கோவாபரேடர்களின் கவனத்திற்கும் இலக்காக்குவீர்களென்று நம்புகிறேன். இப்படிச் செய்ய இங்கிருந்துகொண்டு என்னால் முடியாது. ஆனால் நீங்கள் விஷயத்தை உருவகப்படுத்தி மத்தியஸ்தானங்களுண்டாக்கி பொறுப்புள்ள கிரய சங்கங்களேற்படுத்தினால் இவ்விடத்திய வியாபார ஏற்பாடுகளில் தேவையானால் ஈடுபட்டு உழைக்க நான் மிகவும் சந்தோஷமாய் உடன்படுவேன்.

---

## விழுப்புரம் தாலுக்காவின் முதலாவது கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

விழுப்புரம் தாலுக்கா கோவாபரேடர்களின் முதல் கான்பரன்ஸ் கவர்ன்மெண்டு ட்ரெயினிங் ஸ்கூலின் விசாலமான ஹாலில் சென்ற அக்டோபர் மாதம் 26-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சுற்றுப்புறங்களிலுள்ள கிராமங்களையும் நகரங்களையும் சார்ந்த சங்கங்களின் பிரதிநிதிகளான அநேக கூட்டுறவினர்கள் வந்திருந்தார்கள். ம-ள-ள-ஸ்ரீ திருக்கோயிலூர் ஆர். ஸ்ரீனிவாச அய்யங்கார், திண்டிவனம் டி. கே. வெங்கட்டருமய்யர், டி. வி. குப்புசாமி அய்யர், ஆர் பாலகிருஷ்ண அய்யர், ரெட்டணை ராமசாமி ரெட்டியார் முதலிய பல தீவிர கோவாபரேடர்களும், வந்தார்கள். பார்க்கவந்தவர்களுள் கூடலூர் அஸிஸ்டெண்ட் ரஜிஸ்ட்ராரான மிஸ்டர் எம். கே. வெங்கடாசாரியரும் இருந்தார். விசேஷ குதூஹலம் குடிகொண்டிருந்தது. லோகல் சூபர்வைஸிங் யூனியனுக்கும் அர்பன்பாங்கிக்கும் செகரிடேரியான ம-ள-ள-ஸ்ரீ எஸ்-சிதம்பர அய்யர் எல்லோருக்கும் நல்வரவு கூறினார். அவர் பேசியதில் தாலூக்காவில் சங்கங்களை விசேஷமாய் அதிகப்படுத்தவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார். கிராம நாணயச்சங்கங்களின் எல்லாத் தேவைகளையும் விழுப்புரம் கோவாபரேடிவ் ஸ்டோர் மூலமாக கூட்டாக வாங்



கும் மாதிரியைக் கொண்டாடினார். கைத்தொழிலில் அதிகமாகப் பின்னடைந்திருக்கும் இந்த ஜில்லாவில் புதிதாக திண்டிவனத்தில் ஏற்பட்டுள்ள கைத்தொழிலில் விவசாய சொஸைடிக்கு உடனே உதவி செய்ய வேண்டாமா என்று கேட்டு படித்த கோவாபரேடர்களெல்லாரும் தங்கள் நாட்டார்படும் கஷ்டத்தைத் தவிர்க்க கூட்டுறவு வேலையைக் கைக்கொள்ளவேண்டுமென்று மன்றாடினார். கவர்ன்மெண்டு ட்ரெயினிங் ஸ்கூலின் தலைமை உபாத்தியாயரான ம-ள-ள-ஸ்ரீ பி. சீதாராமய்யர், பி.ஏ. எல். டி. அவர்கள் அக்கிராசனராய் ஏற்படுத்தப்பட்டார். அவர் நமது நாடுபட்டிருக்கும் அசாத்தியக் கடனையும் ஜனங்களுடைய பயங்கரமான அறியாமையையும் பற்றிப் பேசினார். படிப்பு தாராளமான ஏற்பாட்டில் பரவவேண்டிய அவசியத்தையும் கூட்டுறவு வியாபிக்கவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினார். நமது நாடுபடும் அநேகவிதமான வியாதிக்கு மருந்து கூட்டுறவில்தான் இருக்கிறது என்றார்.

பிறகு கோவாபரேடிவ் பக்தர்களான சில விழுப்புரம் உபாத்தியாயர்களால் அநேக உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. மிஸ்டர் ஏ. நாகருஜன் பி. ஏ., எல். டி., அவர்கள் கூட்டுறவு கிரய விக்கிரயத்தைப்பற்றி விசேஷமாய்ப் பேசி எல்லோருடைய தேவைகளையும் எழுத்து மூலமாய்த் தெரிந்துகொண்டு அவைகளின்படி வாங்கும் ஏற்பாட்டை சிபார்சு செய்தார். மிஸ்டர். சி. எஸ். ரங்கஸாமி பி.ஏ. எல்.டி. இந்தத் தாலூகாவில் அநேக கைத்தொழிற் பொருள்கள் உண்டாகிறதைக் காட்டி அவைகள் இத்தாலூக்காவிலேயே சரக்குகளாக ஆக்கப்படவேண்டியது அவசியமென்றார். மிஸ்டர். கே. எஸ். ராஜகோபாலாசாரி, கிராம உபாத்தியாயர்களெல்லாருடைய [illegible]ழைப்புகளையும் கூட்டுறவின் பக்கமாகச் செலுத்தும்படி செய்வதின் பயனைப்பற்றிப் பேசினார். பார்க்க வந்தவர்களுள் திண்டிவனம் மிஸ்டர். டி. கே. வெங்கடருமய்யர் திண்டிவனம் கைத்தொழிற் சங்கத்தைப்பற்றி உற்சாகமாய்ப் பேசி, திண்டிவனம் ரெவினியூ டிவிஷனிலுள்ள மிராசுதாரர்களின் உதவியைக் கோரினார். திருக்கோயிலூர், ஆர். ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள், கிராமத்தில் கூட்டுறவு எண்ணங்களைப் பரவவைக்கும் கஷ்டத்தைப்பற்றிப் பேசி, அவ்விடங்களில் உபந்நியாசங்கள் செய்து உண்மையான கூட்டுறவு வேலை ஏற்படும்படி செய்ய வேண்டுமென்றார். மிஸ்டர், ராமஸ்வாமி ரெட்டியார் பருத்தி சாகுபடிக்காரர்கள் தரகர்கள் கையில் அகப்பட்டுப் படும்பாட்டைப் பற்றிப் பேசி, தானும் ஒரு பருத்தி சாகுபடிக்காரனும் வியாபாரியாகவும் இருப்பதனால் திண்டிவனத்தில் இருப்பதுபோல ஒரு கைத்தொழிற் சங்கத்தின் சௌகரியங்களை ஜனங்கள் உணரவேண்டுவது அவசியம் என்றார். அந்த செக்ஷன் அஸிஸ்டெண்ட் ரஜிஸ்ட்ராரான மிஸ்டர், எம். கே. வெங்கடாசாரியாரவர்களும் சங்கங்களின் பரம்பரைகளையும் அவைகளின் தொ

ழில்களையும் நோக்கங்களையும் பற்றி விஸ்தரித்துப் பேசினார். கான்பரன்ஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுள் சங்கங்கள் கூட்டுறவில் கிரய விக்கிரயங்களைக் கைக்கொள்ளவேண்டியதென்பது வற்புறுத்தப்பட்டு கிராமச் சங்கங்கள் விழுப்புரம் ஸ்டோரில் மெம்பர்களாகும்படி போதிக்கப்பட்டன. பணநாணயம் கூட்டுக்கிரய விக்கிரயத்திற்காக பணம் பெறுதல் இவைகள் விஷயமாய் டிஸ்ரிக்ட் பாங்கியில் வேண்டிய சௌகரியம் செய்து கொடுக்கும்படி அஸிஸ்டெண்ட் ரஜிஸ்ட்ராரவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். கிராமச்சங்கங்களை திண்டிவனம் கைத்தொழிற் சங்கத்தில் பங்கெடுத்துக் கொள்வதோடு பருத்தியைக் கடைவதற்கும் மணிலாக் கொட்டையைப் பருப்பாக்குவதற்கும் அச்சங்கத்திற்கே அனுப்பி உபகரிக்கவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளுகிறது. அக்கிராசனர் நடந்தவிஷயங்களைச் சுருக்கிச் சொன்ன பின் கான்பரன்ஸ் முடிவு பெற்றது. ஆரம்பம் முதல் கடைசிவரைக்கும் ஊக்கம் சிறிதும் குறையவில்லை. கான்பரன்ஸ் மிகச் சிறப்பாக முடிந்தது.

---

## முதலாவது மதுராந்தகம் கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

செங்கற்பட்டு டிஸ்ட்டிரிக்ட்டிலுள்ள மதுராந்தகம் தாலுக்காவின் முதற் கோவாபரேடிவ் கான்பரன்ஸ் ஈளது மாதம் 10-ம் தேதி திங்கட்கிழமையன்று ஜியார்ஜ் காரனேஷன் ஹாலில் நடைபெற்றது. பின்ஷின் ஸப் ஜட்ஜும், காஞ்சீவரம் டவுன் கோவாபரேடிவ் பாங்கின் பிரசிடெண்டுமான மிஸ்டர், ஏ. இராமஸ்வாமி சாஸ்திரியாரவர்கள் அக்கிராசனம் வகித்தார். இந்த தாலுக்கா சொஸைடிகளின் பிரதிநிதிகளாக அநேக டெலிகேட்டுகள் ஆஜராயிருந்தார்கள். வந்திருந்த பிரமுகர்களில் கீழ்க்கண்டவர்களும் இருந்தார்கள். விவசாய டிபுடிடைரக்டரான மிஸ்டர், ஜே. செல்வரங்கராஜு, அஸிஸ்டெண்ட் ரஜிஸ்ட்ரார்களான மிஸ்டர், சி. என். சுப்பிரமணிய அய்யரவர்கள், லீவிலிருக்கும், மிஸ்டர். ஏ. ராமானுஜாசாரியார், காஞ்சீவரம் டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியனின் பிரசிடெண்டாகிய மிஸ்டர், வி. வெங்கடாசாரியார், ஹைகோர்ட் வக்கீல், மிஸ்டர், எம். ராகவாசாரியார், வெஸ்லிமிஷனைச்சேர்ந்த ரெவரெண்டு ஆர். லி. அட்கின்ஸன் முதலியோர்கள்.

உபசரணைக்கமிட்டியின் சேர்மன் வரவேற்புச் சொல்லி முடிந்த பிறகு, பிரசிடெண்டு தம் உபன்னியாசத்தை தமிழில் பேசினார். அப்பொழுது ஒவ்வொரு தாலுக்காவிலுள்ள கூட்டுறவினர்களும் ஓரோர் காலங்களிலும் ஆங்காங்கு கூட்டங்கள் கூடிக், கூட்டுறவு சம்பந்தமான விஷயங்களைப்பற்றி விவகரித்துப் பேசவேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டினார். கிராம நாணயச்சங்க மெம்பர்கள், கூட்டுறவு ஒழுக்கங்களைச் சரிவர அனுஷ்டிக்கத் தங்களாலானவரையில் பார்க்கவேண்டுமென்றும், தேச க்ஷேமத்திற்காக கூடியவரையில் நாணயமில்லாத வேலையை விருத்தி செய்து வரவேண்டுமென்றும் மெம்பர்களை வேண்டிக்கொண்டார். கூட்டுறவுஇயக்கம் தெய்வீக முறையைக் கைக்கொண்டு அதனால் உண்மையான கூட்டுறவு ஏற்பட்டு நன்மைகளைச் செய்யும் சக்தியை விசேஷமாய் பெறவேண்டும் என்றார். தனது உற்சாகமான உபந்நியாசத்தை முடிக்கையில் மதுராந்தகம் கோவாபரேடர்கள் செய்த நல்ல வேலையை ஸ்தோத்திரம் செய்து அடுத்த வருஷக் கான்பரன்சுக்குள் மதுராந்தகம் விவசாயச் சொஸைடி தன்னுடைய நாணயத்தை அதிகத் திடப்படுத்திக் கொள்ளும் என்று தனக்கு நம்பிக்கையிருப்பதாகச் சொன்னார்.



பிறகு மிஸ்டர், ஜே. செல்வரங்க ராஜு "விவசாயமும் கூட்டுறவும்" என்னும் விஷயத்தைப்பற்றித் தமிழில் பேசினார். கூட்டுறவு இயக்கத்திற்கும் விவசாய இலாகாவுக்கும் கிட்டின சம்பந்தமிருப்பதாகத் தன்னுடைய முன்னுரையில் வற்புறுத்தினார். கூட்டுறவு மாதிரியில் கொஞ்ச நிலமுள்ளவர்கள் கூட தங்களுடைய விவசாய சௌகரியத்தை விவசாய இலாகா உத்தியோகர்களின் புத்திமதிகளைக் கொண்டு சீர்திருத்த ஏற்பாட்டில் அனுஷ்டித்து மேம்பாடடையலாம் என்றார். அவர் சில உதாரணங்களைக் காட்டினார். அதில் மதுராந்தகம் விவசாய சொஸைடி 'ஒற்றை விதை ஊன்றுவது' 'பச்சை எருவு உண்டாக்குவது' 'மீன் பிச்சி ஸப்ளை செய்வது' முதலிய ஏற்பாடுகளைக் கைக்கொண்டிருத்தலை எடுத்துக் காட்டினார். கூட்டுறவில் உற்பத்தி செய்தல், வாங்குதல், விற்றல் இவைகளை விவசாய இலாகாவோடு சேர்ந்து செய்யலாமென்றார். இந்த உத்தியோகஸ்தர்களெல்லோரும் மிராசதார்களுக்கு விவசாய விஷயங்களில் எப்பொழுதும் உதவுதற்குத் தயாராயிருக்கிறார்கள். பிறகு கான்பரன்ஸ் வரவேற்புக் கமிட்டியார் தயாரித்த தீர்மானங்களை ஆலோசிக்கலானார்கள். முதலாவது தீர்மானம், விவசாய இலாகா, யூனியன்களை ஏற்படுத்தி எருக்களையும், சீர்திருத்த விவசாயக் கருவிகளையும் கிராமச்சங்க மெம்பர்களுக்கு விற்பதற்காக, அச்சங்கங்களைத் தேர்ந்தெடுக்கும்படி கேட்டுக்கொண்டது. நீண்டகால, குறுகிய காலக்கடன் விஷயங்களைப்பற்றி—நீண்ட காலக்கடன் அத்தியாவசியமான விஷயத்தில் தான் வேண்டுமென்றும், கிஸ்திகொடுக்க, விதைகள் கருவிகள் இவைகள் வாங்க எப்பொழுதும் குறுகிய காலக்கடனே கொடுக்கவேண்டுமென்றும் இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்பட்டது. விவகரிக்க எடுத்துக்கொண்ட அடுத்த விஷயம் கடன் சந்தாக்களை மெம்பர்கள் பணமாய்க் கொடுப்பதற்கு பதிலாகப் பண்டமாய்க் கொடுக்கலாம் என்பது. கெடுவுக்குள் ஒரு மெம்பர் தன் பாக்கியை ரொக்கமாகக் கொடுக்க முடியாவிட்டால் அச்சமயத்தில் அவர்கள் தங்களுடைய மிகு

தித் தானியங்களை சங்கத்தில் கொண்டுவந்து வைத்திருந்து சௌகரியமாய் விலை யேறுங்காலத்தில் விற்று சங்கத்திற்குச் சேரவேண்டியதைக் கொடுத்து விட்டு பாக்கியைப் பெற்றுக் கொண்டு போகலாம்.

புதிதாய் ஏற்பட்ட ட்ரேடிங் யூனியனில் பங்கெடுத்துக் கொள்ளும்படி மதுராந்தகம் யூனியனைச்சார்ந்த எல்லாச் சங்கங்களையும் இக்கான்பரன்ஸ் கேட்டுக் கொண்டது. கான்பரன்ஸ் கவனித்த கடைசியான முக்கிய விஷயம், சங்கங்கள் பெறும் கடன்களின் வட்டி விகிதம் நூற்றுக்கு ¼ வீதம் உயர்த்தப்பட வேண்டுமென்று டிஸ்ட்ரிக்ட் பாங்கு செய்த பிரஸ்தாபத்தைப்பற்றியது. டிஸ்டிரிக்ட் பாங்கின் க்ஷேம நிதியை அதிகப்படுத்துவதற்கு இது உபயோகப்பட வேண்டுமென்றும் நிபந்தனையுடன் இவ்வதிகம் அங்கீகரிக்கப்பட்டது. இவ்விஷயத்தைப்பற்றி அநேக கோவாபரேடிவ் பிரமுகர்கள் மிகவும் கவனித்துப் பேசினார்கள். கடைசியாக இத்தீர் மானத்தை எல்லோரும் ஏகோபித்து அங்கீ கரித்தார்கள்.

கடைசியாக மிஸ்டர் செல்வரங்கராஜு, மாஜிக் லாண்டர்ன் வேடிக்கையை எல்லா மெம்பர்களுக்கும் காட்டி அதில் பல விதமான எருதுகளையும், பசுக்களையும், பலவிதமான கலப்பைகளையும், எரு[illegible]களுண்டாக்கு வதையும், சீர்திருத்த முறையில் கரும்பு சாகுபடி செ[illegible]யும் முறையையும் காட்டினார்.

இவ்வாறு அன்றை யக்கான்பரன்ஸ் கூட்டுறவு இலாகாவும் விவசாய இலாகாவும் கூடி வெகு ஒழுங்காயும் உபயோககரமாயும் நடைபெற்றது. டெலிகேட்டு களெல்லாம் ஆரம்பம் முதல் கடைசிவரையில் வெ[illegible] உற்சாகம் காட்டினார்கள்.

---

# ரிஜிஸ்ட்ராரின் ஸர்க்குலர்கள்

## குறுகிய காலக் கடன்கள்.

விவசாயத்திற்காகவும் வீட்டு சாமான்கள் வாங்கவும் கவர்ன் மெண்டுக் கிஸ்து கட்டவும் மாசூலான உடனே விளைபொருள்களைக் குறைந்த விலைக்கு விற்பதால் ஏற்படும் அசௌகரியத்தை விலக்க குறுகிய காலக் கடன்களினாலேற்படும் பிரயோஜனத்தை ஒவ்வொரு வருஷாந்தர மீட்டிங்கிலும் விஸ்தாரமாய் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சங்கங்கள் குறுகிய காலக்கடனை அதிகமாய் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதில்லை. இதற்கு இரண்டு காரணங்களுண்டு. (1) சில சமயங்களில் பஞ்சாயத்தார்கள் இந்த வேலையில் ஈடுபடப் பிரியப்படுவதில்லை (2) இவ்வேற்பாட்டில் கடன் ஸாங்ஷனாவதற்கு கொஞ்சம் காலஹரணமாகிறது. கடன் மனுவு யூனியனுக்கும் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ராருக்கும், டிஸ்ட்ரிக்ட் பாங்கிக்கும் போய்வர வேண்டியிருக்கிறது.



இத்தாமதத்தைக் குறைப்பதற்கு கீழ்க்கண்ட யோசனை சௌகர்யமென்று கூறப்படுகிறது. ஒவ்வொரு சொஸைடியும் ஒவ்வொரு வருஷ ஆரம்பத்திலும் ஒரு ஸ்டேட்மெண்டு தயாரிக்கவேண்டும். அதில் ஒவ்வொரு மெம்பருக்கும் அவ்வருஷத்தில் சாதாரணமாய் தேவையா யிருக்கக்கூடிய குறுகிய காலக்கடன்களையும் எந்தெந்த மாதங்களில் எவ்வளவு வேண்டும் என்பதையும் காட்டவேண்டும், சங்கத்திற்குத் தேவையான மொத்தத்தொகையை நிர்ணயஞ்செய்து ஒவ்வொரு மெம்பருக்கும் ஆலோசனைசெய்து எவ்வளவு கடன்களைக் கொடுக்கலாம் என்று பஞ்சாயத்தார் ஒரு தீர்மானஞ் செய்யவேண்டும். வருஷாந்தரத்திற்கு குறுகிய காலக்கடன்கள் எவ்வளவு தேவையாயிருக்கும் எந்தெந்தக் காலத்தில் எவ்வளவு ஆகலாம் என்று ஒரு உத்தேசமான மதிப்பிட்ட தீர்மானமொன்றும் முன்சொன்ன தீர்மானத்துடன் செய்யவேண்டும். குறிக்கப் பட்டுள்ள கடன் மனு அச்சுப்பாரத்தில் மனு ஒன்று தயாரித்து யூனியனுக்கு அனுப்பவேண்டும். அந்த மனுவில் ஒவ்வொரு மெம்பருக்கும் தேவையான தனித் தொகைகள் காட்டவேண்டிய அவசியமில்லை. யூனியனுக்குக் குறுகிய காலக்கடன் மனுவை அனுப்புங்காலத்தில் அத்தொகை தங்கள் சங்கம் கடன் வாங்கக் கூடிய அளவுக்குள் இருக்கிறதா என்பதை பஞ்சாயத்தார் கவனிக்கவேண்டும். இல்லாவிட்டால் ஒரு மகா சபை மீடிங்கு கூட்டி சங்கத்தின் கடன் வாங்கக்கூடிய அளவை அதிகப் படுத்த ஒரு தீர்மானஞ் செய்யவேண்டும். எச்சங்கத்திலாவது உயர்த்தப்படும் கடன்வாங்கும் பொறுப்பளவு மெம்பர்களின் நிகர ஆஸ்தியின் எட்டி லொருபங்குக்கு மேலிருந்தால் அச்சங்கம் கடன் வாங்கும் சக்தியை கீழ்க்கண்ட நிபந்தனைப்படி அதிகப்படுத்திக் கொள்ளலாம். அதாவது வாங்க உத்தேசஞ் செய்திருக்கும் அதிகத் தொகைக் குறுகிய காலக் கடன்களுக்கே உபயோகிக்கப்படுமென்பதே. சங்கம் வாங்கக்கூடியகடன் அளவுக்கு மேல் கடன் பொறுப்பளவை அம்மாதிரி உயர்த்துதல் நன்றாக வேலைசெய்யும் சங்கங்களுக்கு சிபார்சு செய்யப்படலாம். டிஸ்டிரிக்ட் பாங்கிங் யூனியன்களும் அம்மாதிரியான பிரத்தியேகச் சந்தர்ப்பங்களில் கடன் பொறுப்பளவை உயர்த்திக் கொள்வதற்கு இடங்கொடுத்து உதவி செய்யலாம்.

ஒவ்வொரு சங்கமும் தங்களுடைய மெம்பர்களுக்கு வேண்டிய விவசாயவீட்டுச் செலவுகளை மொத்தமாக வாங்கி ரொக்கத்திற்கோ கடனுக்கோ தன் மெம்பர்களுக்குள் விநியோகிப்பதற்காக தனித்தனியாய் குறுகிய காலக்கடன்களுக்கு மனுவுசெய்து கொள்ளலாம். அம்மாதிரியான மொத்த ஆர்டர்கள் ஒரு வியாபார யூனியன் அல்லது சூபர்வைசிங் யூனியனிடம் குறுகிய காலக்கடன் முறையை அனுசரித்திருக்கும் தொகையைக் கொண்டு நிறைவேற்றலாம்.

அணைக்கப்பட்ட எல்லா சங்கங்களின் ஆர்டர்களையும் அவர் ஒன்று சேர்த்து சேர்த்து இனவாரியாய்த் தொகுப்பார்கள். ஒவ்வொருசங்கமும் தங்கள் ஜாபிதாப்பிரகாரம் வந்தசரக்குகளை மெம்பர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும். அப்படிப்பகிர்தல் ரொக்கத்திற்கு மிருக்கலாம் கடனாகவு மிருக்கலாம் கடனாகப்பகிர்ந்து கொடுக்கும் இடங்களில் சிலாக்கியமான முறை என்னவென்றால் நாணயவகுப்பில் அந்த மெம்பருக்கு ஒருகடன் ஏற்பாடு செய்தலே. அம்மாதிரி கடன் வியாபாரத்தினால் குறைந்து போன தொகையைப் பூர்த்தி செய்வதற்கு ஒவ்வொரு சங்கமும் ஒரு புதிய குறுகியகாலக்கடனுக்கு சாதாரணமாதிரியில் மனுவு செய்து கொள்ள வேண்டும். அதனால் வருஷம்முடிய வியாபார அட்வான்ஸின் குறுகிய காலக்கடன் தொகை ஆரம்பத்திலிருந்தது போலவே குறையாமல் வைக்கப்படலாம். வியாபாரத்திற்காகவும் வேறுவிஷயத்திற்காவும் குறுகிய காலக்கடனுக்காகச் செய்து கொள்ளும் மனுக்கள் யூனியனின் வருஷாந்தர மீட்டிங்கில் கவனிக்கப்படலாம். அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ராரும் சீக்கிரமாக சிபார்சுசெய்யக்கூடும். டிஸ்டிரிக்ட் பாங்கிகள் தாமதமில்லாமல் கடன்களை சாங்ஷன் செய்யும் நிலைமையிலிருக்கும். கடன் சாங்ஷன் உத்திரவு ஒரு சொஸைடிக்கு வந்தஉடனே, விதிக்கப்பட்டிருக்கிற பத்திரத்தை அது ஸ்ட்ரிக்ட் பாங்கின் பேருக்கு எழுதி அவிடத்திற்கு அனுப்பிவிடவேண்டும். தேவை யாயிருக்கும் முழுத்தொகைக்கும் ஒவ்வொருவரும் முன்னாடியே தனித்தனியாகப் பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டால் அவர்களுக்கு மிகவும் நலமாயிருக்கும். 15 நாளைக் கொருதரம் அல்லது ஒருமாதத்திற் கொருதரமாவது மெம்பர்களைக்கூட்டி அவர்களுக்குத் தேவையாயிருக்கும் தொகையைக் குறிக்கச்சொல்லி அடுத்த சமயத்தின் தேவையை அறிந்து கொள்ளலாம். வேண்டிய தொகையை பஞ்சாயத்தார் டிஸ்ட்ரிக்ட் பாங்கிலிருந்து எடுத்து மெம்பர்களுக்குத் தேவையான தொகைகளை 3 அல்லது 4 நாளைக்குள் பகிர்ந்துகொடுத்து விடுவார்கள். சங்கங்கள் டிஸ்டிரிக்ட் பாங்கிலிருந்து அப்போதைக்கப்போது வாங்கும் தொகைகளுக்குத்தான் வட்டி கொடுக்கவேண்டுமே யொழிய பத்திரத்தில் கண்ட முழுத்தொகைக்குமல்ல. தவிர பணம் வாங்கின தேதியிலிருந்து வட்டியே யொழிய பத்திரம் எழுதிக் கொடுத்த தேதியிலிருந்தல்ல. இதற்காக தனிக்கணக்குப் புத்தகங்கள் வைத்துவரவேண் (அதாவது காஷ் புத்தகம், கடன் லெட்ஜர், சாமான்கள் வந்த ஜாபிதாடும். சாமான் விற்றது போக பாக்கிக்காட்டும் ஜாபிதா.

சோதனை உத்தியோகஸ்தர்கள் குறுகிய காலக்கடன் வேலையை தனியாய் கவனித்து எந்த மெம்பருக்காவது நீண்ட காலக்கடனுக்கு ஈடாக இக்கடன் கணக்கில் (அட்ஜஸ்ட்மெண்டு) எழுதப்பட்டிருந்தாலும் வியாபார விஷயத்திற்காக குறுகிய காலக்கடனின் பாக்கியை உபயோகித்



தாலும் அதிகாரிகள் கவனித்து வரவேண்டும். வியாபார யூனியன்கள் பண பாக்கிகளை அனாவசியமாய் சொஸைடிகளில் தங்க விடாமல் பார்த்துக்கொள்வதோடு தாங்களும் அவ்வாறே இருந்து வரவேண்டும்.

---

## தொழிலும் கூட்டுறவும்

இந்த வருஷத்தில் தான், கிராமச் சங்கங்களின் மெம்பர்களுள் மிராசுதார்கள், நிலமில்லாத குடிகள், சாகுபடிசெய்து ஜீவிப்பவர்கள் இவர்களின் சங்கியைகளை முறையே காட்டும் ஸ்டேட்மெண்டு ஒன்று முதல் முதல் தயாரிக்கப் பட்டிருப்பதை கோவாபரேடர்கள் கவனிக்குமாறு ரிஜிஸ்ட்ரார் வேண்டுகிறார். கிராமச் சங்கங்களின் மொத்த மெம்பர்கள் 1,71,000. இதில் 1,27,000 விவசாயத்திலேயே ஜீவிக்கிறார்கள். இவர்கள் கடைசி ரிபோர்ட்டின்படி கீழ்க்கண்டபடி வகுக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயம் செய்யாத மிராசுதார்கள் 13,000 விவசாயம் செய்யும் மிராசுதார்கள் 93,000 குடித்தனக்காரர்கள் 17,000 நிலத்தில் கூலி வேலை செய்பவர்கள் 400. இவ்விலக்கங்களினால் நமது கிராமச்சங்கங்கள் தங்களுக்குள் ஏழைகளைச் சேர்க்க இடங்கொடுக்கிறதில்லைபோலிருக்கிறது. அல்லது அவர்களைக் கூப்பிடாமலாவது இருக்கிறது. ஏனென்றால் சாதாரண கிராமத்தில் சொந்த நிலமில்லாத விவசாயிகளின் சங்கியைக்கும் நிலமுள்ளவர்களின் சங்கியைக்குமுள்ள சராசரி, கிராமச்சங்கங்களில் அத்தகையோர் களின் சராசரியை காட்டிலும் விசேஷ அதிகமாயிருக்கிறது என்று ரிஜிஸ்ட்ரார் அபிப்பிராயப்படுகிறார். இவ்விலக்கங்கள் முற்றிலும் சரி என்று ரிஜிஸ்ட்ரார் சொல்ல வரவில்லை. நஞ்செய் சாகுபடிக்காரர்களில் அநேகர் புஞ்செய் வைத்திருப்பார்களாகையால் மேற்கூறிய இலக்கங்கள் முழுதுமே சரி என்று சொல்லமுடியாது. இவ்விஷயத்தைப்பற்றி ரிஜிஸ்ட்ராரவர்கள் நூற்றுக்கணக்கான சங்கப் பிரதிநிதிகளுடன் பிரஸ்தாபித்திருக்கிறார். இவ்விலக்கங்கள் அநேகமாய் சரியானதுதானென்று அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இது சரியாயிருந்தால் கூட்டுறவினர்களெல்லாரும் தங்களுடைய ஒழுக்க முறையினின்றும் வெகுதூரம் பிந்தியே யிருக்கிறார்களென்று ஒப்புக்கொள்ளவேண்டும். கூட்டுறவின் சாரம் ஏழைகளும் பலஹீனர்களும் சாதாரண ஜீவனத்தையும் கவனத்தையும் பெறும்படி செய்வதே என்று ரிஜிஸ்ட்ராரவர்கள் நினைப்பூட்டுகிறார். நமது சங்கங்களால் ஏழைகளையும் மகா ஏழைகளையும் உபகரிக்க முடியாவிட்டால் அவர்களுடைய கூட்டுறவுமுறையில் ஏதாவது பிசகு இருக்கவேண்டும். கூட்டுறவினால்

அற்புத வித்தைகள் செய்ய முடியாதென்பதும், நம்பமுடியாதவனாகவாவது, சம்பாதிக்கச் சிறிதும் சக்தியே இல்லாதவனாகவாவது இருக்கும் எவனுக்கும் நல்ல பிழைப்புக் கொடுக்கமுடியாது என்பதும் வாஸ்தவம் தான். கூட்டுறவு உண்மையாய் உபகரிக்க கூடிய ஒரே வகுப்பினர்கள், நன்றாய்ப் பாடுபடும் யோக்கியமானவர்களே. எந்த யோக்கியமான உழைப்பாளியும் அவன் எவ்வளவு ஏழையானாலும் கூட்டுறவினால் நல்ல வாழ்வைப் பெறவேண்டும். மேலும் ஒரு கோவாபரேடிவ் சொஸைடியில் மெம்பராவதற்குத் தகைமையையும் பெறவேண்டும்.

ஆஸ்தி கொஞ்சமும் இல்லாதவனுக்குக் கடன்கொடுத்தால் அபாயம் என்று சில சமயம் தர்க்கிக்கப்படுகிறது. அத்ற்கு யதில், அந்த மனிதனுக்கு சம்பாதிக்கும் சக்தியும் யோக்கியமான நடவடிக்கையு மிருந்தால் அவனுக்குஆஸ்தியிருந்தாலும் இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்பதே. சம்பாதிக்கும் சக்தியிருந்தால் தன் சரீர உழைப்பினால் திருப்பிக் கொடுக்கும் யோக்கியதையை அடையலாம். ஒருவன் திருட்டு அல்லது பிச்சையெடுத்தலை மேற் கொள்ளாமல் பலவருஷங்கள் தன் குடும்ப சம்ரக்ஷணை செய்து வந்திருந்தானானால் இவ்வொருவிஷயமே அவன் ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் கடனைத் திருப்பிக்கொடுக்கப் போதுமான சக்தியுள்ளவன் என்பதை ரூபிக்கும்.

அம்மனிதன் ஒரு சவுகாரண்டை கடன் பட்டிருக்கலாம். ஆனால் இக்கடன்கள் சாதாரணமாய் அசாத்தியமாயில்லை. அல்லது மேற்சொன்ன நியாயத்தை மறுக்கக்கூடியதுமில்லை. அதற்கு மாறாக அந்த நியாயத்தை ஆமோதிக்கிறது. தன் பணத்தை சௌகாரிடமிருந்து பெற்றும் கூட குடும்ப நிர்வாகம் பண்ணிவரும் ஒருவன் கோவாபரேடிவ் சொஸைடியில் பணம் கடன் வாங்கினால் இன்னம் எவ்வளவு எளிதாய் நிர்வகிக்கமாட்டான் ?

ஆகையால் ஒரு நாணயமான உழைப்பாளி தனது குடும்ப விவகாரத்திற்கும் விவசாயத் தேவைகளுக்குமாகப் பெறும் கடன்களைத் திருப்பிக் கொடுக்கச் சக்தியுள்ளவன் என்று ஏற்படுகிறது. என்றாலும் அவன் ஏழையாயிருந்தால் அவன் திருப்பிக் கொடுப்பானென்று நம்பமுடியாதே என்று அடிக்கடி விவகரிக்கப் படுகிறது. அல்லது அவனுக்குத் திருப்பிக் கொடுக்கும் சக்தியிருந்தாலும் அவ்வாறு செய்யும்படியான யோக்கியபுத்தி இல்லாமலிருக்கலாம் என்பது கக்ஷி. அடிக்கடி இம்மாதிரிகக்ஷி பேசப்பட்டாலும் கூட இது கோணற் கக்ஷியாகத் தோன்றுகிறது. நமது கிராம மெம்பர்கள் தங்களுடைய கடன்களைச் சங்கத்திற்குத் திருப்பி யோக்கியமாய்க் கொடுத்துவிடுவார்கள் என்று உண்மையாகவே நம்ப முடியாமலிருந்தாலும் நமது சங்கங்களும் கெட்டியான அடமானத்தி



லேயே நம்பியிருந்தாலும் அவர்களுக்கும் சாதாரண சவுகார்களுக்கும் வித்தியாசமில்லை நமது முன்னேற்ற மார்க்கங்களும் இருண்டு பயமுள்ளதாகத்தானிருக்கும். விஷயம் இப்படித்தான் என்பதில் ரிஜிஸ்ட்ராருக்கு நம்பிக்கையில்லை. ஒரே கிராமத்திலிருந்துகொண்டு பரம்பரையாய் பரஸ்பரம் பழக்கத்திலிருந்து வரும் ஒருவன் நல்ல யோக்கியமான உழைப்பாளியாயிருந்திருப்பதால் அவனை நம்புவது அசாத்தியமாகுமா? என்ற அவருடைய கேள்வியைக் கூட்டுறவினர்கள் ஆலோசிக்கவேண்டியது. அத்தகைய மனிதனை பத்திரமாய் முற்றிலும் நம்பக் கூடாது என்ற விஷயம் மனித சுபாவத்திற்குப் பொருத்தமாகாத விஷயமென்று ரிஜிஸ்ட்ராரவர்களுக்குத் தோன்றுகிறது. அனுபவமான விவகாரம் மேற்கூறிய எண்ணத்திற்கு மாறாக இருந்திருக்கிறதாக வாதிக்கலாம். ஆனால் கோவாபரேடிவ் சங்கங்களின் பணக்கார மெம்பர்களைக் காட்டிலும் ஏழை மெம்பர்களே கடன்களைச் சரிவரத் திருப்பிக் கொடுத்து வருவதாகத் தெரிகிறது. சாதாரண வருஷத்தில் ஒரு கிராம நாணயச்சங்கம் அனுப்பும் நிலுவை ஜாபிதாவைப்பார்த்தால், பிரியப்பட்டால் தாராளமாய் கொடுக்க சக்தியுள்ள பணக்காரர்களுடைய பெயர்களே அதிகமாயிருக்கிறது. ஏழைகளின் பாக்கியோ அவர்களால் நிவர்த்திக்க முடியாத காரணங்களை யொட்டிய சிலவற்றைத்தவிர்த்து அபூர்வம்தான். இதற்குக் காரணமும் எளிதாகத் தெரிகிறது. தன் நாணயம் தவறுவதனால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைப்பற்றி பணக்காரனுக்கு இலக்ஷியமில்லை. சொஸைடி கடன்கொடுக்காவிட்டால் வேறிடங்களில் சாதாரண ஏற்பாட்டில்வாங்கக் கூடிய பலம் இருக்கிறது. அதனால் சொஸைடியைப்பார்த்து "உன்னால் ஆனதைப் பார்" என்று சொல்லலாம். ஏழைகளுக்கோ அப்படியில்லை. அவன் நாணயம் தவறினால் பேராசை பிடித்த சாவுகார்களிடம் தான் அவன் போகவேண்டும்.

இன்னொரு விஷயம் சங்கிக்கலாம் சங்கிக்கவும் படுகிறது. யோக்கியமான ஏழை சரியான ஈடில்லாமலிருந்து இறந்து விட்டால் என்ன செய்கிறது என்பதே. இது அபாயம்தான் என்பதில் ஆக்ஷேபமில்லை. என்றாலும் இது எக்காலத்திலோ ஒருமுறை சம்பவமாகலாம். அச்சம்பவம் மிகக் குறைவாகத்தானிருக்கும். அடிக்கடி நடக்காது. அவன் சாகும்போது சங்கத்திற்கு பாக்கி கொடுக்க வேண்டியதாய் வைத்துக் கொண்டாலும் அவனுடைய சம்சாரம், குழந்தைகள், சகோதரர்கள் முதலியோர்கள் கடன் பாக்கியின் ஒரு பாகத்தையாவது கொடுத்துத் தீர்க்க முயலுவார்கள் என்று எதிர்பார்க்கலாம். நல்ல நிலைமையிலிருக்கும் சிநேகிதராவது, அனுதாபராவது அக்குடும்பத்திற்கு உதவலாம். மிகவும் மோசமாகவே வைத்துக்கொண்டாலும் கடைசியில் நிலுவையிலிருப்பது

பெரிய தொகையாயிருப்பது சாதாரணமாய் சாத்தியமில்லை. இம்மாதிரியான எதிர்பாராத சில்லரை நஷ்டங்களை ஈடுபடுத்துவதற்காகத் தான் ஒவ்வொரு சங்கமும் க்ஷேமநிதி ஏற்பாடு வைத்துக் கொண்டிருக்கிறது. ஆகையால் மரணத்தினால் நேரிடக்கூடிய நஷ்டத்தை ஒவ்வொரு சொஸைடியும் நியாயமாய் வகிக்கலாம் என்று புலப்படும்.

ரிஜிஸ்ட்ராரவர்கள் தன்னுடைய சமீப சுற்றுப் பிரயாண சமயங்களில், ஒரு ஏழை எவ்வளவு யோக்கியனாயிருந்தாலும் அவனுடைய ஜாமீனைச் சங்கம் ஏற்றுக்கொள்ளப் பிரியப்படாதிருப்பது விசேஷ வழக்கமென்பதைப் பார்த்தார். ஜாமீனின் பிரயோஜனம் இன்னது என்பதைச் சரியானபடி அறியாமலிருப்பதே இந்தப் பிரியமின்மைக்குக் காரணமென்று தெரிகிறது. ஒரு மெம்பர் யாருக்காக ஜாமீன் கொடுக்கிறானோ அவருடைய கடனை அந்த மெம்பரிடமிருந்து வசூல் செய்வது மிக்க அபூர்வம் என்று எல்லாருடைய அனுபவமும் சொல்லும். ஆனால் ஜாமீன் கொடுக்கவேண்டியது அனாவசியமென்று ஒருவரும் இக்காரணத்தைக் கொண்டு சொல்ல முடியாது. ஜாமீன் காரனுடைய முக்கிய வேலை என்னவென்றால் கடன்காரனை அடிக்கடி கவனித்து சங்கக்கடனைப்பற்றி நினைப்பூட்டி, அவன் கொடுக்கக்கூடிய சமயம்பார்த்து ஞாபகப்படுத்தலே. இவ்வேலையெல்லாம் பஞ்சாயத்திற்கு எளிதாக்குவதற்காகத்தான் ஜாமீன் ஏற்பட்டது. கடன்காரன் தவறும் பக்ஷத்தில்தன்னுடைய ஆஸ்திக்கு இக்கட்டு நேருமாகையால் இவ்வேலையை அவன் கவனமாகவும் நன்றாகவும் செய்கிறான். ஆகையால் அவன்சாதாரணமாய் நஷ்டமடைகிறதில்லை. ஆனால் ஒரு ஏழை மற்றொரு ஏழைக்காக ஜாமீனாகயிருந்தால பணக்கார ஜாமீனைவிடக் குறைவாக வேலை செய்வான் என்றால் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். ஆயிரக்கணக்கான ரூபாயுள்ள ஒரு பணக்காரனும் ஐம்பது ரூபாயுள்ள ஒரு ஏழையும் ஒரு நிலவேலை செய்பவனுடைய 30 ரூ. கடனுக்காகத் தனித்தனியாய் ஜாமீன் ஏற்றுக்கொண்டதாக வைத்துக்கொள்வோம். கடன்காரன் சரிவரக்கடனைத் திருப்பிக் கொடுக்கும் விஷயத்தில் யாருக்கு அதிகக் கவலையிருக்கும்? ஏழைக்குத்தான் நிச்சயமாயிருக்கும். பணக்காரனுக்கு முப்பது ரூபாய் நஷ்டமானால் இலக்ஷியமில்லை. ஏழைக்கோ மிகக்கொடுமையை விளைவிக்கும். ஆகவே பணக்காரனைவிட பாக்கி விழாமலிருக்கும் விஷயத்தில் அதிகக்கவலையும் சிரத்தையும் எடுத்துக்கொள்பவன் ஏழையே. மேலும் கடன்காரனிடம் அதிக நெருக்கமான பழக்கம் பணக்காரனைவிட இவனுக்குண்டு. ஏனென்றால் லௌகிகமுறையில் இருவரும் ஒரே முறைமையிலிருப்பார்கள். அதனால் மற்றவனுடைய போக்குவரத்துகளை நன்கு கவனிக்கலாம். மேலும் ஒரு ஏழையைப்பார்த்து நல்ல அந்தஸ்திலுள்ள ஜாமீனைக்கொண்டுவரச் சொல்வது அவனுக்கு மிக்க



இடைஞ்சல் விளைவிப்பதாகும். அப்படி அந்தஸ்திலுள்ளவன் ஜாமீன் கொடுத்துவிட்டால் கடன் ஒழிகிறவரையில் அவர் சொன்னபடியெல்லாம் கேட்டுக்கொண்டு காத்துக்கொண்டிருந்து, நிலம் உழுது, தன் வேலையையெல்லாம் விட்டுவிட்டு அவருடைய ஏவலையெல்லாம் செய்து இம்மாதிரியெல்லாம் அல்லலுறுவது விசேஷ வழக்கமாயிருக்கிறது. இக்கஷ்டமெல்லாம் ஒரே அந்தஸ்திலுள்ளவர்களின் ஜாமீனைப் பெறுவதினால் விலக்கலாம்.

மேற்குறித்த ஆலோசனைகளை எல்லாக் கோவாபரேடர்களும் நன்கு கவனித்து, வசனத்தினாலும், செய்கையினாலும், ஏழைகள் மெம்பராவதையாவது ஜாமீனாவதையாவது அவர்களுடைய ஏழ்மையின் காரணமாய்த் தடுக்காமலிருக்க வேண்டுமென்றும் உலகத்தின் ஒவ்வொரு தேசத்திலும் உணர்ந்திருப்பதுபோலவே இந்தியாவிலும் கூட்டுறவின் முக்கிய நோக்கம் ஏழைகளுக்கு சாதகம் பண்ணுவதற்கென்றே உணர வேண்டுமென்றும் பிரயத்தினம் செய்வார்களென்று ரிஜிஸ்ட்ராரவர்கள் நம்புகிறார்.

---

# விவசாயப் பகுதி

## விதை நெல் தெரிந்தெடுத்தல்.

நல்ல மாஸூல் கிடைக்க வேண்டுமானால் எந்தப்பயிராயிருந்தாலும் சரி, நல்லவிதைகளை உபயோகிக்கவேண்டும். நெல்பயிருக்கும் இப்படியே.

தேயிலை, ரப்பர், தென்னை இவைகளைப்பயிரிடுபவர்கள் இந்த விஷயத்தை நன்றாய்த்தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நல்ல விதைகளாய்த் தெரிந்தெடுத்து உபயோகிப்பதே வழக்கம்.

மேல்நாடுகளில் கோதுமை முதலிய பயிர்களுக்கு நல்லவிதைகளை உபயோகிப்பது வழக்கம் ஜப்பானிலும் இப்படியே. இந்தியாவில் இந்த வழக்கம் இப்போதுதான் கொஞ்சம் ஆரம்பித்திருக்கிறது.

விதை தெரிந்தெடுத்தலின் முக்கிய கொள்கை பின்வருமாறு: பலமும் தேகஸௌகமும் உள்ள பெற்றோர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் தாங்களும் பலமும் தேகஸௌகமும் உள்ளவைகளாக ஆகும். அதுபோலவே நல்லபயிரிலிருந்து எடுத்த விதைகளிலிருந்து நல்ல பயிர் உண்டாகும்.

நெல்விஷயத்தில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், வயலில் எந்தப்பயிர் நன்றாக வளர்ந்திருக்கிறதென்று கவனித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இதற்கு வ்யவஸாயி அடிக்கடி வயலைச்சுற்றிப்பார்த்து, வளரும் செடிகளை கவனித்து, எவை நன்றாயிருக்கின்றன வென்று குறிப்பிட வேண்டும்.

சிலநாற்றுகள் நன்றாய் வளர்ந்து அதிக தூர் கட்டியிருக்கும் எத்தனைக் கெத்தனை தூர்கள் அதிகமாகின்றனவோ அத்தனைக்கத்தனை பயிரிலுள்ள கதிர்களும் அதிக மாகின்றன.

இப்படித்தூர்கள் அதிகமாயிருக்கிற நாற்றுகளில், பின்னால் கதிர்கள் எப்படியிருக்கின்றனவென்று பார்க்கவேண்டும். மணி நன்றாயும் அதிகமாயும் உள்ள கதிர்களைக் குறிப்பிட்டு வைத்துக்கொள்ளவேண்டும்.

இப்படிப்பட்ட பயிர்களைப்பின்னால் அடையாளம் கண்டுபிடிப்பதற்காக வெள்ளைத்துணி அல்லது சிவப்புத்துணியில் ஒரு துண்டு எடுத்து, அதனால் கட்டிவைப்பது நல்லது. அல்லது வேறு எந்த அடையாளம் வைத்துக்கொண்டாலும் பாதகமில்லை. குறிப்பிட்டு வைத்துக்கொண்ட செடிகளை மறந்து விடக்கூடாதென்பதே முக்கியம்.

அந்தச் செடிகளிலுள்ள மணிகள் நன்றாய் முற்றின பிறகு அந்தச் செடிகளை மாத்திரம் தனியாக அறுவடை செய்யவேண்டும். ஸாதாரண அறுவடையோடு கலக்கக்கூடாது.

இப்படித்தனியாக அறுத்தெடுத்த தாள்களை அடித்து, தான்யத்தை வேறாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

இவ்வளவு ஜாக்கிரதையுடன் விதை எடுத்தாலும், கதிரில் உள்ள மணிகள் எல்லாமே ஒரே சீராக இருப்பது கிடையாது. சிலவிதைகள் பருமனாகவும், கனமாகவும் இருக்கும், சில சாவியாகவும், சில லேசாகவும் இருக்கும். நமக்கு வேண்டியது பருமனாயும் கனமாயுமுள்ளதே.

இதற்கு விதையைத் தூற்றவேண்டும். சாவியும், ரொம்ப லேசான விதையும் பிரிந்து போகும். பிறகு, விதையிலிருந்து உபயோகமற்றவைகளை கையால் பொறுக்கி யெடுத்து விடலாம்.

உபயோகமற்றவைகளை எந்தக் காரணத்தைகொண்டும் விதைக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது. அவைகளால் அதிக பலன் கொடுக்கக்கூடிய பயிர் உண்டாகமாட்டாது.

ஜப்பானில் விதைகளை உப்புக்கரைத்த ஜலத்தில் நனைக்கிறார்கள். ஜலத்தில் ரொம்ப உப்புப் போட்டு, எவ்வளவு கரையக்கூடுமோ அவ்வளவையும் கரையவிட்டபிறகு, அந்த ஜலத்தை எடுத்து உபயோகிக்கிறார்கள். இந்த ஜலத்தில் அமிழும் விதைகள் நல்லவிதைகள். மிதப்பவைகளைத் தள்ளிவிடவேண்டும். இது ஒரு நல்ல முறை. ஆனால் சற்றுச்ரமமானது.



இவ்விதம் வர்ஷா வர்ஷம் விதைகளைத் தெரிந்தெடுத்து உபயோகித்தால், மாஸூலும் க்ரமமாக அதிகமாகிக் கொண்டேவரும்.

ஜனோபிமானி.

## கோவாபரேடிவ்விதை பாங்கிகள்.

வ்யவஸாயிகளில் பலர் சில ஸமயங்களில் தக்க விதை அகப்படாமல் கஷ்டப்படுகிறார்கள். பணக்காரர்கள் தான் விதைகளை சேகரித்து வைக்கிறார்கள். ஏழைகளுக்கு இது வெகுவாய் ஸாத்யப்படுவதில்லை. அவர்கள் கடைக்காரர்களிடமிருந்து உபயோகமற்ற விதையை சொன்ன விலைக்கு வாங்க நேரிடுகிறது.

வ்யவஸாயிகள் பணம் கடன் வாங்க கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஏற்படுத்திக் கொள்வது போலவே, விதை வாங்க கோவாபரேடிவ் விதை பாங்கிகள் ஏற்படுத்திக் கொள்ளலாம். இரண்டுக்கும் முறை ஒன்று தான். நாணய ஸங்கத்தில் மூலதனம் பணமாகும். கடன் கொடுப்பதும் பணம். விதை பாங்கியிலோ மூலதனம் விதை; கடன் கொடுப்பதும் விதையே.

ஸங்கங்களில் சேரும் மெம்பர்கள் கொடுக்கும் ப்ரவேசக் கட்டணம், அவர்கள் போடும் டெபாஸிட்டுகள் இவைகளைக் கொண்டு, ஸங்கத்தார் கவர்ன்மெண்ட் வ்யவஸாயப் பண்ணையிலிருந்தாவது, அல்லது தக்க வ்யவஸாயியிடமிருந்தாவது விதையை விலைக்கு வாங்க வேண்டும். விதைகளைச் சேகரித்துவைக்க குதிர்கள் முதலியவைகளும் வாங்கவேண்டும். விதைகளை விதைக்கும் பருவத்துக்கு சற்று முன்னாலேயே வாங்கி வைத்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால், விதைக்கும் பருவம் நெருங்க நெருங்க விதையின் விலை அதிகமாகிக்கொண்டுவரும்.

விதைகளை கண்ட பேர்களிடம் வாங்கக் கூடாது. சரியான முறையில் சாகுபடி செய்பவர்களிடம் தான் வாங்க வேண்டும். முடியுமானால், அறுவடையான உடனே வாங்கினால் விலை மலிவாக இருக்கும்.

விதையை வாங்கு முன் அதை சோதனை செய்ய வேண்டும். தூசி, களைகளின் விதை முதலியவை அதிகமிருக்கக் கூடாது. முளைக்கும் விதைகளும் அதிகமாக இருக்க வேண்டும். பொறுக்கி யெடுக்காமல் கலந்தவாரியாக 100-விதை மணிகளை எடுத்து, பூந்தொட்டி முதலியவைகளில் விதைத்துப் பார்க்க வேண்டும். விதைத்தவைகளில் எத்தனை முளைத்தனவென்பதைக் கொண்டு, ஒரு குறிப்பிட்ட விதை தான்யம் நூற்றுக்கு எவ்வளவு முளைக்கும் தன்மையுள்ளதென்பதை நிர்ணயிக்கலாம். முளைக்கும் தன்மை தான்யத்துக்கு தான்யம் வித்யாஸப்படும். ஸாதாரணமாக நல்ல விதை 100--க்கு 80-பாங்குக்கு மேல் முளைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். விதைகள் முளைக்க வேண்டியிருக்கும்

நாட்களைக்கொண்டு விதையின் திடத்தை அறியலாம். மூன்று நாட்களில் கோதுமை முளை கண்டால், அது நல்ல திடமான விதையென்று சொல்லலாம்.

விதைகளுள் தான்யங்களிலும் பருத்தியிலும் களைப்பூண்டுகளின் விதை அதிகமாக இராது. எண்ணெய் வித்துகளிலும், துவரை, உளுந்து முதலிய புன்செய் தான்யங்களிலும் களைப் பூண்டுகளின் விதை இருக்கும்.

நெல் கோதுமை முதலியவைகளில் கருக்காய், தூசி, மண் முதலியவை இருக்கும். இந்த அசுத்தங்களைப் போக்க தான்யங்களை நன்றாய்த் தூற்றிவிட வேண்டும்.

விதைகளில், முக்யமாய் தான்யங்களில், அந்து முதலியபூச்சிகள் சேரும். விதைகளைக் கொட்டி வைக்குமுன் அந்துப் பூச்சிகளையும் அவைகளின் முட்டைகளையும், அழித்துவிட வேண்டும். இதற்கு ஒரு ஸுலபமான முறை இருக்கிறது. நூறு பங்கு ஜலத்தில் இரண்டு பங்கு மயில் துத்தத்தைக் கரைத்து அந்த ஜலத்தில் விதைகளை பத்து நிமிஷ நேரம் நனைத்து வைத்து, பிறகு நிழலில் உலர்த்தி எடுக்கவேண்டும். வெயிலில் உலர்த்தக்கூடாது. நன்றாய்க் காய்ந்தபிறகு 100 ராத்தல் தான்யத்துக்கு 5 ராத்தல் வீதம் சுண்ணாம்புக் கல்லாவது, மரச்சாம்பலாவது சேர்த்துக் கலந்து, உடனே குதிர் முதலியவைகளில் போட்டுவிட வேண்டும்.

விதைகளை பத்ரப்படுத்துவதில் முக்யமாக கவனிக்கவேண்டியது என்னவென்றால், பூச்சிகள் வரக்கூடாததும், எலிகளால் கெடுதி ஏற்படாததுமான இடங்களில் அவைகளை சேகரித்து வைக்கவேண்டும்.

விதைக்கும் காலத்தில் ஸங்கத்தார் மெம்பர்களுக்கு வேண்டிய அளவு விதையைக் கடனாகக் கொடுப்பார்கள். கொடுத்த விதைக்கு இன்ன விலை யென்று அப்போதே ஏற்படுத்தி விடவேண்டும். விதை வாங்கின மெம்பர்கள் விதைத்து மாஸூலெடுத்த பிறகு விதையின் விலையோடு ரூபாய்க்கு வர்ஷத்துக்கு 1½ அணா வீதம் வட்டி சேர்த்து கடனைத் திருப்பிவிடவேண்டும். வட்டி விகிதத்தை ஸௌகர்யம்போல் வேறு விதமாகவும் ஏற்படுத்திக் கொள்ளலாம். மெம்பரின் பயிர் முற்றிலும் சாவியாகப் போனாலொழிய கடனைக்கண்டிப்பாய் வஸூலித்து விடவேண்டும். ஸங்கத்தார் வஸூலான பணத்தைக்கொண்டு மறுபடியும் விதை வாங்கலாம்.

ஸங்கத்தார் சில முக்ய விஷயங்களை கவனிக்கவேண்டும். விதைப்பதற்கென்று கடன் கொடுத்த விதையை மெம்பர்கள் சாப்பாடு முதலிய வேறு கார்யங்களுக்கு உபயோகிக்காதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.



சில மெம்ப ர்களைத் தெரிந்தெடுத்து அவர்கள் மூலமாய் நல்லவிதை களை உற் செய்து, ஸங்கத்துக்கு வாங்கலாம். அரை வட்டிக்கு டிபாஸிட் வாங்கி முக்கால் வட்டிக்கு விதை கடன் கொடுப்பதால் கால் வட்டி மிச்சப்படுகிறது. இதிலிருந்து நீர் வாகச் செலவு செய்துகொண்ட பிறகும் லாபம் இருக்கும். இந்த லாபத்தை ரிஸர்வ் பண்டாக வைக்க வேண்டும்.

"ஜனமிமானி"

---

# இந்த இராஜதானியில் ரிஜிஸ்டரான வரையில் உள்ள வியாபார யூனியன்களின் ஜாபிதா

| | வியாபார யூனியன் பெயர்கள் | ஜில்லா. |
|---|---|---|
| 1. | அமலாபுரம் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் | கோதாவரி |
| 2. | திருவண்ணாமலை கோவாபரேடிவ் பர்சேஸ் சொஸைடி | வட ஆற்காடு |
| 3. | விருத்தாசலம் கோவாபரேடிவ் பர்சேஸ் சொஸைடி | தென் ஆற்காடு |
| 4. | லால்குடி தாலூகா கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் | திருச்சிராப்பள்ளி |
| 5. | கள்ளக்குரிச்சி கோவாபரேடிவ் பர்சேஸ் சொஸைடி | தென் ஆற்காடு |
| 6. | திருவானைக்கோயில் கோவாபரேடிவ் விவசாய சொ. | செங்கல்பட்டு |
| 7. | மதுராந்தகம் கோவாபரேடிவ் விவசாய சொஸைடி | ஷை |
| 8. | நீலகிரி கோவாபரேடிவ் ஹோல்ஸேல் கிரயவிக்கிரய சொஸைடி | கோயமுத்தூர் |
| 9. | எல்லமாஞ்சிலி கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் | விசாகபட்டணம் |
| 10. | இச்சாபுரம் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் | கஞ்சம் |
| 11. | திருத்துரைப்பூண்டி கோவாபரேடிவ் பர்சேஸ் சொஸைடி | தஞ்சாவூர் |
| 12. | காட்டாம்பள்ளி கோவாபரேடிவ் ஸ்டோர் | வட ஆற்காடு |
| 13. | ஊமங்கலம் கோவாபரேடிவ் ஸ்டோர் | சேலம் |
| 14. | போளூர் தாலூகா கோவாபரேடிவ் யூனியன் | வட ஆற்காடு |
| 15. | செய்யார் தாலூகா கோவாபரேடிவ் யூனியன் | ஷை |
| 16. | வந்தவாசி தாலூகா கோவாபரேடிவ் கிரய சொஸைடி | ஷை |
| 17. | பட்டுக்கோட்டை ,, ,, | தஞ்சாவூர் |
| 18. | திருக்கோயிலூர் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் | தென் ஆற்காடு |
| 19. | திருத்தங்கல் கோவாபரேடிவ் விவசாய வியாபார கைத்தொழில் சொஸைடி | ராம |

| | |
|---|---|
| 20. தஞ்சாவூர் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் | தஞ்சாவூர் |
| 21. கம்புளியம் பட்டி கோவாபரேடிவ் கிரய விக்கிரய சொஸைடி | கோயமுத்தூர் |
| 22. காகனுடா நகர கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் | கோதாவரி |
| 23. சென்னிமலை கோவாபரேடிவ் கிரய விக்கிரய சொஸைடி | கோயமுத்தூர் |
| 24. பெஜவாடா கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் | கிருஷ்ணா |
| 25. தரங்கம்பாடி கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் | தஞ்சாவூர் |
| 26. நாமக்கல் வியாபார யூனியன் | சேலம் |
| 27. கமலாபுரம் வியாபார யூனியன் | ஷை |
| 28. தர்மபுரி ஸ்டோர்ஸ் | ஷை |
| 29. சேலம் ஸ்டோர் | ஷை |
| 30. வேலூர் ஸ்டோர்ஸ் | வட ஆற்காடு |
| 31. ஹோசூர் ஸ்டோர் | சேலம் |
| 32. ஹோசூர் ரிமௌண்ட் டிப்போ | ஷை |
| 33. கோதாவரி மத்திய டெல்டா விவசாய கோவாபரேடிவ் யூனியன் | கோதாவரி |
| 34. பெதபல்லா கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் | ஷை |

225491.